இலக்கு

வாராந்த மின்னிதழ்

29.12.2019

இதழ் 58

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

GLOBAL TAMIL MEDIA CENTRE, USA • ilakku2009@gmail.com

www.ilakku.org www.facebook.com/Illakku-Web https://twitter.com/Ilakku1

ஆழிப்பேரலை அனர்த்தம் 15 ஆண்டுகள்

இறந்த மக்களையும், தம்மை காப்பாற்றிய தமிழீழ அரசையும் நினைவு கூர்ந்த மக்கள்

திட்டமிட்டு அழிக்கப்படும் கிழக்கின் வளங்கள்

தமிழ் மக்கள் வாழமுடியாத நிலை ஏற்படுமா?

கிருஸ்ணா

அழிவின் விளிம்பில் நெடுங்கேணி

எல்லையோர தமிழ்க் கிராமம்

கோ.ரூபகாந்

இந்தியக் குடியுரிமைப் பிரச்சனை மதப்பிரச்சனை மட்டுமல்ல

வேல் தர்மா



தமிழினத்தின் மீதான முகநூலின் அடக்குமுறை

என்ன செய்யப்போகின்றோம்?

வேல்ஸ்சில் இருந்து அருஷ்

தற்றுணிவு

தற்கொலைக்கல்ல

வடக்கு கிழக்கில் தோன்றிய சூரிய கிரகணம்

நோர்வே– யாழ் பல்கலைக்கழகங்கள் அமைத்த அவதானிப்பு முகாம்கள்

தென்கிழக்கு ஆசியா, மத்திய கிழக்கு நாடுகள், தென்னிந்தியா மற்றும் வட பசுபிக் பிராந்தியம் ஆகிய பகுதிகளில் உள்ள வான் பரப்பில் கடந்த வியாழக்கிழமை(26) சூரிய கிரகணம் தென்பட்டதுடன், அதனை பல இலட்சம் மக்கள் கண்டு களித்துள்ளனர்.

நெருப்பு வளையாமாகக் காணப்படும் இந்த கிரகணம், சந்திரன் முற்றாக சூரியனை மறைப்பதற்கு உரிய தூரத்தின் சுற்றுப்பாதையில் நிலை கொள்ளாததால் ஏற்படுகின்றது. எனவே தான் சந்திரனினால் மறைக்கப்படாத சூரியனின் பகுதி வளைமாகக் காணப்படுகின்றது.

இது ஒவ்வொரு வருடமும் அல்லது இரண்டு வருடத்திற்கு ஒருமுறை நிகழும் போதும் அதனை காண்பது அரிது. ஏனெனில் மிகவும் மெல்லிய நெருப்பு வளையமே பெரும்பாலும் தென்படுவதுண்டு. ஆனால் சில பத்து வருடங்களுக்கு ஒருமுறையே கிரகணம் மக்களின் கண்களுக்கு தெரிவதுண்டு.

அடுத்த கிரகணம் எதிர்வரும் வருடம் ஜுன் மாதம் ஆபிரிக்கா தொடக்கம் வட ஆசியா வரையிலான பகுதிகளில் தோன்றும். அதன் பின்னர் 2021 ஆம் ஆண்டு ஜுன் மாதம் ஆர்ட்டிக் பிராந்தியம், கனடா, கிறீன்லான்ட் மற்றும் ரஸ்யாவின் கிழக்கு பிராந்தியத்தில் தென்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில் இந்த கிரகணத்தைப் பாதுகாப்பாக பார்ப்பதற்கு ஏதுவான ஏற்பாடுகள் யாழ். பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல் பீடத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப் பட்டிருந்தது. அதற்கான மேலதிக உதவிகளை கொழும்பு பல்கலைக்கழகம், நோர்வே மேற்கு பிரயோக விஞ்ஞானப் பல்கலைக்கழகம், இலங்கை தொழில்நுட்ப அமைச்சு ஆகியன வழங்கியிருந்தன.

யாழ் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு அருகாமையில் உள்ள மைதானத்திலும், கிளிநொச்சியில் உள்ள பொறியியல்பீட வளாகத்திலும் அவதானிப்பு முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தன. அங்கு உயர் தொழில்நுட்ப வசதிகள் கொண்ட தொலை நோக்கிகள் நிறுவப்பட்டிருந்தது.

இந்த முகாம்களின் ஊடாக 3000ற்கு மேற்பட்டவர்கள் கிரகணத்தை பார்வையிட்டதாக யாழ். பௌதீகவியல் துறையின் மூத்த பேராசிரியர் பி. ரவிராஜன் தெரிவித்துள்ளார்.

இந்த கிரகணத்தை வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் பெருமளவான மக்கள் பார்வையிட்டதுடன், 8 வினாடிகளுக்கு தோன்றிய நெருப்பு வளைய கங்கண சூரியகிரகணத்தை (Annular Solar Eclipse) மக்கள் ஆர்வமுடன் பார்த்தனர்.

அதேசமயம், இதனை பார்வையிடுவதற்கு வெளிநாடுகளில் இருந்தும் பல விஞ்ஞானிகள் வருகை தந்திருந்தனர்

தொடரும் கைதுகள்

அச்சத்தில் தென்னிலங்கை அரசியல்வாதிகள்

சிறீலங்காவில் பதவிக்கு வந்துள்ள புதிய அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்ச தனக்கும் தனது குடும்ப உறவினர்களுக்கும், கட்சிக்கும் எதிரான தென்னிலங்கை அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளை தொடர்ந்து வேட்டையாடி வருவதால் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் மத்தியில் கடுமையான அச்சநிலை ஒன்று தோன்றியுள்ளது.

முன்னாள் அமைச்சர்களான ராஜித சேனரத்ன மற்றும் பாட்டாளி சம்பிக்க ரணவக்க ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ள போதும், சம்பிக்க ரணவக்க தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

அதேசமயம், முன்னாள் அமைச்சர்களான சரத் பொன்சேகா, விஜித் விஜிதமுனி, ரவூப் ஹக்கீம் மற்றும் றிசாட் பதியுதீன் ஆகியோர் கைது செய்யப்படலாம் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னர் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கு ஒன்றை மீண்டும் பதிவு செய்து பொன்சேகாவையும், அமைச்சராக இருந்த காலத்தில் 80 ஜீப் ரக வாகனங்கள் அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி கொள்வனவு செய்து விற்பனை செய்தது தொடர்பாக விஜிதமுனியும் கைது செய்யப்படவுள்ளனர்.

அதேசமயம், ஊழல் குற்றச்சாட்டுக்கள் மற்றும் கடந்த ஏப்பிரல் மாதம் இடம்பெற்ற குண்டு வெடிப்பு தொடர்பில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு முன்னாள் முஸ்லீம் அமைச்சர்கள் இருவரும் கைது செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே அண்மையில் நடைபெற்ற அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டவரும், முன்னாள் சிறீலங்கா இராணுவத் தளபதியுமான மகேஸ் சேனநாயக்கா நாட்டை விட்டு குடும்பத்துடன் தப்பியோடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

துபாய் சென்றுள்ள அவருக்கு அமெரிக்க நிறுவனம் ஒன்று வேலை வாய்ப்பை வழங்கியுள்ளது சிறீலங்கா அரசுக்கும் மேற்குலகத்திற்குமான முறுகல் நிலையை மேலும் அதிகரித்துள்ளது.

2020 உலகத் தமிழினத்திற்கு ஈழத்தமிழரின் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் ஆண்டாக மலர்கிறது

2020இல் இலங்கையில் அரசியல் அதிகாரப் பரவலாக்கம் என்ற பேச்சுக்கே இடமில்லை, நாட்டின் தேசிய கீதம் கூட சிங்களத்திலேயே பாடப்பட வேண்டும் 2009ம் ஆண்டு இனஅழிப்பால் தங்கள் கிட்டின குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்களுக்கான நீதி என்ற பேச்சுக்கே இடமில்லாது வெறுமனே யுத்தத்தால் இறந்தவர்கள் என்ற மரணச் சான்றிதழ் வழங்கப்படுவதுடன் இனஅழிப்பு அங்கீகரிக்கப்படும். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகம் சிறிலங்கா அரசாங்கத்தின் ஏற்புடன் செய்த மனித உரிமைகள் மேம்பாட்டுக்கான ஒப்பந்தங்கள் எதனையும் செயற்படுத்தாது தங்கள் விருப்புக்கேற்ற புதிய ஒப்பந்தங்களைச் செய்தல், தங்கள் மேலான மனித உரிமை மீறல்கள், யுத்தக்குற்றச் செயல்கள் உட்பட்ட அனைத்து நீதி விசாரணைகளையும் தாங்கள் சனாதிபதி பிரதமர் என்ற வகையில் அப்பதவிகளுக்கான சிறப்புச் சலுகைகளைக் கொண்டு இல்லாது செய்தல் எனப் பல்வேறு வகையான ஏதோச்சதிகார சக்தியாக ஈழத்தமிழர்களின் இனஅழிப்புக்குப் பொறுப்பாக இருந்த குடும்பமே சனநாயகத்தின் போர்வையில் கிட்லர் செய்தது போன்ற மற்றொரு இனஅழிப்பு ஆட்சியொன்றை 2020இல் இலங்கையில் ஏற்படுத்தத் தொடங்கியுள்ள வேளையில் 2020 உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்களுக்கும் தமிழகத் தமிழர்களுக்கும் தங்கள் தமிழ் இனத்தின் மனித உரிமையைப் பாதுகாக்கும் பொறுப்பு மிகு ஆண்டாக மலர்கிறது.

புதிய அரசின் வேட்டை தொடர்கின்றது

கதிர்வீச்சின் மூலம் கொல்லப்பட்டாரா பிரதம நீதிபதி?

அண்மையில் சிறீலங்காவில் மரணமடைந்த உயர் நீதிமன்ற நீதிபதி பிரசன்னா ஜெயவர்த்தனா, அணுக்கதிர் வீச்சின் மூலம் கொல்லப்பட்டுள்ளதாக நீதியாளர் வட்டாரங்கள் சந்தேகம் தெரிவித்துள்ளன.

63 வயதான பிரசன்னா திடீர் சுகவீனம் காரணமாக வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட சில மணி நேரங்களில் மரணத்தை தழுவியுள்ளார்.

அவர் இரத்தப் புற்றுநோய் காரமணமாக இறந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ள போதும், அவரது திடீர் மரணம் தென்னிலங்கை அரசியல்வாதிகள் மற்றும் நீதியாளர்கள் மத்தியில் அச்சத்தை தோற்றுவித்துள்ளது.

நேர்மையாக தீர்ப்புக்களை வழங்குவதில் பிரசன்னா மிகவும் சிறந்த நீதியாளர் என கொழும்பைத் தளமாகக் கொண்ட நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, பிரித்தானியாவில் தஞ்சமடைந்துள்ள ரஸ்யாவின் முன்னாள் படை அதிகாரிகளை குறிவைத்து ரஸ்ய புலனாய்வுத்துறை கதிர்வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டு வருவது போலவே இதனை தாம் பார்ப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தி என்பது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாகாது

கொழும்பு ஊடகம்

அபிவிருத்தி மூலம் இனப்பிரச்சனைக்கான தீர்வைத் தேடுகின்றது சிறீலங்கா அரசு. அதிகளவிலான அதிகாரப் பகிர்வே இனப்பிரச்சனைக்கான தீர்வு, பொருளாதார அபிவிருத்தி அதனை ஈடுசெய்ய மாட்டாது. பொருளாதார அபிவிருத்தி தற்போதைய சிக்கல்களை மேலும் அதிகரிக்கும், ஏனெனில் பொருளாதாரத்தில் மேம்பட்டுள்ள ஒரு இனம் அடுத்து தனக்கான அதிகாரத்தை தேடும். பொருளாதாரத்தில் பின்தள்ளப்பட்டதால் தமிழ் மக்கள் போராடவில்லை, ஏனெனில் 1980களில் போர் தீவிரமடைவதற்கு முன்னர் சிறீலங்காவின் இரண்டாவது செல்வச் செழிப்புள்ள நகராக யாழ்ப்பாணமே திகழ்ந்தது என கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தனது அரசியல் ஆய்வில் தெரிவித்துள்ளது.

அதன் விபரம் வருமாறு:

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை பொருளாதார அபிவிருத்தி மூலம் மாற்றீடு செய்ய முற்பட்டுள்ளார் புதிய சிறீலங்கா அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சா.

அதிகாரப் பரவலாக்கம் என்பது பொய், அதனை பெரும்பாலானவர்கள் எதிர்க்கின்றனர். இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கப்பாடு என்பது அபிவிருத்தி மூலம் ஏற்படுத்தப்படலாம் என அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கோத்தபாயா தெரிவித்திருந்தார். இந்திய வெளிவிவகார அமைச்சருக்கும், இந்து பத்திரிகை ஊடகவியலாளருக்கும் கோத்தபாயா அதனையே தெரிவித்திருந்தார்.

கடந்த 70 வருடங்களாக எல்லா அரசியல் தலைவர்களும் ஒரே வார்த்தையை தான் கூறி வந்தார்கள். அது அதிகாரப்பகிர்வு என்ற வார்த்தை. ஆனால் யாரும் அதனை நிறைவேற்றவில்லை. 1987 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இலங்கை இந்திய உடன்பாட்டைத் தொடர்ந்து கொண்டுவரப்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டமும் முழுமையான அதிகாரப் பகிர்வை கொண்டிருந்தது. ஆனால் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் விருப்பத்திற்கு எதிராக அதனை நிறைவேற்ற முடியாது.

தமிழ் மக்களுக்கு அபிவிருத்தியையோ அல்லது வேலை வாய்ப்புக்களையோ வழங்குவதை சிங்கள மக்கள் எதிர்க்கவில்லை. ஆனால் அரசியல் அதிகாரம் வழங்கப்படுவதை அவர்கள் எதிர்க்கின்றனர் என கோத்தபாயா தெரிவித்துள்ளார்.

அதாவது சிறீலங்கா அரசு அபிவிருத்தி மூலம் இனப்பிரச்சனைக்கான தீர்வைத் தேடுகின்றது. அதிகளவிலான அதிகாரப் பகிர்வே இனப்பிரச்சனைக்கான தீர்வு, பொருளாதார அபிவிருத்தி அதனை ஈடுசெய்யமாட்டாது என போராசிரியர் அமீர் அலி தெரிவித்துள்ளார். பொருளாதார அபிவிருத்தி தற்போதைய சிக்கல்களை மேலும் அதிகரிக்கும், ஏனெனில் பொருளாதாரத்தில் மேம்படும் ஒரு இனம் அடுத்து தனக்கான அதிகாரத்தை தேடும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத்தில் பின்தள்ளப்பட்டதால் தமிழ் மக்கள் போராடவில்லை, ஏனெனில் 1980 களில் போர் தீவிரமடைவதற்கு முன்னர் சிறீலங்காவின் இரண்டாவது செல்வச்செழிப்புள்ள நகராக யாழ்ப்பாணமே திகழ்ந்தது.

கல்வியில் அல்லது பதவிகளில் பின்தங்கியதால் அவர்கள் போராடவில்லை ஏனெனில் 1980 களின் முற்பகுதியில் உயர் நீதிமன்ற நீதிபதிகள், காவல்துறை மா அதிபர், வழக்கறிஞர்கள், கணக்காளர்கள், நிர்வாக சேவையாளர்கள் ஆகிய பதவிகளில் தமிழர்களே அதிகம் இருந்தனர்.

அதாவது அவர்கள் தம்மை ஆள்வதற்கான அதிகாரத்தைக் கேட்கின்றனர். இது அவர்களின் அரசியல் அபிலாசை மற்றும் தமிழ்த் தேசியவாதம். வடக்கு – கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை அவர்கள் கோரி நிற்கின்றனர். தமிழ் மக்களின் தன்னாட்சிக்கான இந்த கோரிக்கை என்பது சிறீலங்கா சுதந்திரம் அடைவதற்கு முன்னரே ஆட்சியில் இருந்த ஆங்கிலேயர்களை நோக்கி முன்வைக்கப்பட்டதொன்று.

1932 ஆம் ஆண்டு சிறீலங்காவில் இடம்பெற்ற தேசிய சபைக்கான தேர்தலை வடபகுதியில் புறக்கணித்த தமிழ் இளைஞர்கள் தமக்கு முழுமையான சுதந்திரமான தேசம் தேவை என்ற கோரிக்கைகளை ஜனநாயக வழியில் முன்வைத்திருந்தனர்.

இந்த கோரிக்கையானது சிறீலங்கா அரசு கொண்டுவந்த தனிச் சிங்களச் சட்டத்தின் பின்னர் மேலும் வலுப்பெற்றது. கடந்த 70 வருடங்களாக தமிழர் தரப்பு சிறீலங்காவின் தேசிய அரசில் பங்கெடுக்கவில்லை, விலகியே நின்று வருகின்றது. ஆனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தற்போது ஒரு மாற்றத்தை தேட முற்பட்டுள்ளது.

இந்த செயற்பாடு முஸ்லீம் மற்றும் மலையக அரசியக் கட்சிகளின் செயற்பாடுகளை ஒத்ததாக இருக்கலாம். அவர்கள் மத்திய அரசில் அங்கம் வகிப்பதுண்டு.

போர் நிறைவடைந்த பின்னரும் தமிழ் அரசியல் கட்சிகளோ மக்களோ அபிவிருத்தி தொடர்பில் அதிக நாட்டம் காண்பிக்கவில்லை. அவர்கள் தமிழ் தேசியம் தொடர்பிலே அதிக நாட்டம் கொண்டுள்ளனர்.

கற்றலொனியா மாகாணம் ஸ்பெயின் நாட்டில் உள்ள செல்வச் செழிப்பு மிக்க மாகாணம், ஆனால் அவர்கள் தமது சுதந்திரத்திற்கான வாக்கெடுப்பை நடத்தி வருகின்றனர். பிரித்தானியாவில் உள்ள ஸ்கொட்லாந்தும் அவ்வாறே, பொருளாதாரத்தில் மேன்மையடைந்து நின்றாலும், அவர்கள் தமது அரசியல் அதிகாரத்தை தேடுகின்றனர்.

தொடர்ச்சி 4ம் பக்கம்

ஆசிரியர் தலையங்கம்

2020 இல் ‘இலக்கு’ நோக்கி தனித்துவங்களுடன் இணைந்து பயணிப்போம்

2020ம் ஆண்டுக்குள் உலக மக்கள் அடியெடுத்து வைக்கும் இனிமையான இந்த ஆண்டுத் தொடக்கத்தில் ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலான அவர்களின் தாயக-தேசிய-தன்னாட்சி உரிமைகளைப் பெறுவதற்கான 'இலக்கு' நோக்கிய சனநாயகப் பயணத்தில் உலகெங்கும் உள்ள தமிழர்களும் முழுஅளவில் இணைவோம் என உறுதிமொழி எடுப்போம்.

2000ம் ஆண்டு 2வது மிலேனியம் பிறக்கின்ற நேரத்தில் ஈழத் தமிழ் மக்கள் தங்களுடைய சொந்த மண்ணில் தங்களுடைய தாயகத்தைத் தேசியத்தை தன்னாட்சியைப் பேணக் கூடிய முறையில் நடைமுறையில் உண்மையான அரசு (Defacto) ஒன்றைத் தாமே கொண்டிருந்தனர். உலகின் இராணுவத் தந்திரோபாய ஆய்வுகள் ஒரு தீவுக்குள் இரு அரசுக்கள் உள்ளன இவற்றை உலகு அங்கீகரிக்குமா என்ற கேள்வியை எழுப்பியிருந்தன.

2010ம் ஆண்டு பிறக்கின்ற நேரத்தில் சிறிலங்கா அரசின் தமிழின அழிப்பு யுத்தத்தால் ஈழத்தமிழர்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கும் மனிதாயத்திற்கு எதிரான யுத்தக் குற்றச் செயல்களுக்கும் இனஅழிப்புகளுக்கும் நீதியையும் புனர்வாழ்வையும் தேடுகின்ற மக்களாகவும், சிறிலங்காப் படைகள் ஆக்கிரமித்த தங்களின் வாழ்விடங்களையும் தொழில்களையும் மீண்டும் பெற்றுக்கொள்ளும் போராட்டத்தில் தீவிரமாகச் செயற்பட்ட மக்களாகவும் ஈழத்தமிழ் மக்கள் விளங்கினர்.

2020ம் ஆண்டு பிறக்கின்ற நேரத்தில் சிங்களவர்கள் தமிழர்களுக்கு எந்த அரசியலதிகாரப் பரவலாக்கத்தையும் அனுமதிக்க மாட்டார்கள். ஆகவே அதிகாரப் பரவலாக்கல் என்ற பேச்சுக்குக் கூட இடமில்லை என்றும், சிறிலங்காப் படைகளிடம் சரணடைந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கிட்டிய உறவினர்க்கு யுத்த விளைவுகளுக்குள்ளானவர்கள் என்ற மரணசான்றிதழையே பெறுவார்கள் என்றும் சிறிலங்காவின் அரச அதிபரே அறிவித்த நிலையில், நாட்டின் தேசிய கீதம் கூட இனிச் சிங்களத்திலேயே பாடப்பட வேண்டும் என்பது போன்ற சிங்கள பௌத்த பேரினவாதத்தை அரசாங்கமே முன்னெடுக்கும் நடவடிக்கைகளுடனும், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையகம் இலங்கையில் மனித உரிமை மற்றும் நல்லிணக்க மேம்பாடுகளுக்காக சிறிலங்கா அரசுடன் செய்த ஒப்பந்தங்களைக் கூடத் தாங்கள் நடைமுறைப்படுத்தப் போவதில்லை என்ற சிறிலங்கா அமைச்சரவையின் தீர்மானங்களுடனும் ஈழத்தமிழ் மக்கள் தங்கள் புதிய ஆண்டைத் தொடங்குகின்றனர். சுருக்கமாச் சொன்னால் 2009 முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புக்குப் பொறுப்பான அண்ணன் - தம்பி இருவருமே பிரதமராகவும் அரச அதிபராகவும் தொடங்கியுள்ள ஆட்சியின் போக்கு தமிழர்களுக்கு எப்படியிருக்கப் போகிறது என்பதற்கான அறிகுறிகள் தொடங்கி விட்டன.

இந்த ஏதோச்சதிகார ஆட்சி தொடங்கியுள்ள 2020இலாவது உலகெங்கும் புலம்பெயர்ந்து உலகின் பலநாடுகளின் குடிகளாகிவிட்ட ஈழத்தமிழர்களும், தமிழகத் தமிழர்களும், உலகத் தமிழர்களும் என்னும் இன்றைய உலகத் தமிழினம் ஈழத்தமிழர்களின் அனைத்து உரிமைகளையும் பாதுகாப்பதையும், அவர்களின் சமுக பொருளாதார அரசியல் ஆன்மிக உரிமைகளை அவர்கள் மேலும் இழக்காமல் காத்து, இழந்தவற்றை மீட்கும் அவர்களின் அனைத்து முயற்சிகளுக்கும் பக்கத்துணையாக நிற்க வேண்டிய இனத்துவப் பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்.

இன்று பல்வேறு தளங்களில், பல்வேறு வடிவங்களில், பல்வேறு அமைப்புக்களில், ஈழத்தமிழர்களின் உரிமைகளுக்காக சனநாயக வழிகளில் உழைக்கும் எல்லோரும், தங்கள் தங்கள் தனித்துவத்துடன், ஆனால் ஈழத்தமிழர்களின் தாயகம், தேசியம், தன்னாட்சி என்கிற ஒரே இலக்கை அவர்கள் அடைய வைக்கக் கூடிய முறையில் மாறுபாடுகளை மதித்து ஒற்றுமையுடன் பொதுவேலை திட்டத்தில் 2020இல் பயணித்தாலே தற்போது சனநாயகத்தின் மூலமே சர்வாதிகாரத்தை நிறுவும் இன்றைய சிறிலங்கா அரசின் புதிய இனஅழிப்பு இனத்துடைப்புத் தந்திரோபாயங்களை ஈழத்தமிழர்கள் எதிர்கொள்ள உதவ முடியும்.

- ஆசிரியர்

தென்னிலங்கையில் மீண்டும் காவல்த்துறை பதிவுகள் ஆரம்பம்

கொழும்பின் புறநகர் பகுதியான நுகேகொடவில் மீண்டும் காவல் நிலையத்தில் மக்களை பதிவு செய்யும் நடைமுறைகள் கொண்டு வரப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நுகேகொட பகுதியில் உள்ள வீடுகளுக்கு விண்ணப்பப் படிவங்களை வழங்கிய சிறீலங்கா காவல்துறையினர் வீடுகளில் தங்கியிருப்பவர்கள் குறித்த விபரங்களை 24 மணி நேரத்திற்குள் பதிவு செய்து காவல்நிலையத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

போர் இடம்பெற்ற காலத்தில் இவ்வாறான பதிவுகள் கொழும்பில் இடம்பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

பொருளாதார...தொடர்ச்சி....

பொருளாதார அபிவிருத்தி ஊடாக வடக்கும் தமிழகமும் ஒரு பொருளதார நெருக்கத்தை பேணினால் கூட அது நீண்டகாலத்தில் சிறீலங்கா அரசுக்கு மிகப்பெரும் அழிவை ஏற்படுத்தும். எனவே அதிகாரப் பகிர்வே தீர்வாகலம். ஆனால் எந்தவகையான அதிகாரங்கள் என்பதே தற்போதைய கேள்வி?

முழுமையான அதிகாரம் என்பது காணி மற்றும் காவல்த்துறை அதிகாரங்களைக் கொண்டது. ஆனால் அது அதிகார மோதல்களை ஏற்படுத்தலாம். எனவே தான் பிரச்சனையை தீர்க்காது, அதனை எவ்வாறு கையாள்வது என்பது தொடர்பில் அரசு சிந்திக் கின்றது.

ரஸ்யா, சிங்கப்பூர் துருக்கி போன்ற நாடுகள் அதனையே மேற்கொள்கின்றன. அதாவது பிரச்சனைக்கு தீர்வு காணாது அதனை கையாள்வது என்பது அவர்களின் கொள்கை.

எனவே தான் சிறீலங்கா அரசு அபிவிருத்தியை கையில் எடுத்துள்ளது. அரசிடம் பல வியூகங்கள் உள்ளன. அபிவிருத்தி, மொழிக்கான உரிமை, நிர்வாக அதிகாரம் என்பவற்றை கலந்து வழங்குவதன் மூலம் பிரச்சனைக்கு தீர்வு காணாது அதனை கையாள முற்பட்டுள்ளது.

அதேசமயம், அபிவிருத்தி மற்றும் அதிகாரங்களை பெறும் தமிழ் இனம் தனது அரசியல் சுதந்திரத்திற்காக போராடாது தடுப்பதற்காக தனது படையினரையும், புலனாய்வுக் கட்டமைப்பையும் பலப்படுத்தி வருகின்றது சிறீலங்காஅரசு என அதில் தெரிவி க்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தல் தொடர்பில் தமிழரசுக் கட்சிக்குள் குழப்பம்

அரசியலில் இருந்து சம்பந்தன் ஒய்வு

சிறீலங்காவில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை என தமிழிழரசுக் கட்சியின் தேர்தல் வேட்பாளர் ஆர்சம்பந்தன் (86) தெரிவித்துள்ளார்.

1977 ஆம் ஆண்டு முதன் முதலாக நாடாளுமன்றத்திற்கு தெரிவான சம்பந்தன், இன்று வரை தொடர்ச்சியாக நாடாளுமன்ற த்திற்கு தெரிவாகி வருகின்றார். எனினும் 1989 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் தோல்வியை தழுவியிருந்தார். ஆனால் தற்போது அவர் தேர்தலில் இருந்து ஒதுங்கியுள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை (27) இடம்பெற்ற நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் அவர் கலந்து கொள்ளவில்லை.

இந்த கூட்டத்தில் தமிழரசுக் கட்சி, ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் பங்குபற்றியிருந்தன. எதிர்வரும் பொதுத் தேர்தலில் தென்னிலங்கையில் போட்டியிடுவது எனவும், அதற்காக கம்பகா மற்றும் கொழும்பு மாவட்டங்களை தெரிவு செய்வதெனவும் இந்த கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஜனநாயக மக்கள் முன்னனியின் தலைவர் மனோ கணேசனுடன் கூட்டணி அமைப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதனிடையே, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தலா ஒரு வேட்பாளரை நிறுத்தவுள்ளதாக புளொட் அமைப்பின் தலைவர் த. சிர்த்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சி.வி விக்கினேஸ்வரனின் தமிழ் மக்கள் கட்சி ஈபிஆர்எல்எப் உடன் இணைந்து தேர்தலில் போட்டியிடத் தீர்மானத்துள்ளது. இந்த கூட்டணிக்கு அனந்தி சசிதரனும் தனது ஆதரவு களை வழங்கியுள்ளார்.

அதேசமயம், தமிழத் தேசிய மக்கள் முன்னனி தனித்து தேர்தலில் போட்டியிடத் தீர்மானித்துள்ளது. கடந்த உள்ளூராட்சி தேர்தலில் கணிசமாக வாக்குகளை இந்த கட்சி பெற்றதால், இந்த பொதுத்தேர்தலில் இக்கட்சி தொடர்பில் நம்பிக்கைகள் அதிகரித்துள்ளதாக வடபகுதித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சோமாலியாவின் தலைநகரில் குண்டு வெடிப்பு 79 பேர் பலி

சோமாலியாவின் தலைநகரில் இன்று (29) காலை இடம்பெற்ற வாகனக் குண்டு வெடிப்பில் 79 பேர் கொல்லப்பட்டதுடன், பெருமளவானோர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள காலை நேரத்தில் தலைநகர் மொகடிசுவில் இடம்பெற்ற இந்த குண்டு வெடிப்பில் 149 பேர் காயமடைந் துள்ளதாகவும் மிகவும் சக்தி வாய்ந்த இந்த குண்டு வெடிப்பு இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்ற குண்டு வெடிப் பின் சக்தி யை ஒத்தது எனவும் உயிர் தப்பியவர்கள் தெரிவித்துள் ளனர்.

இரண்டு வருடங் களுக்கு முன்னர் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஏறத்தாள 500 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

தாக்குதலாளிகள் படையினரின் சோதனை நிலையத்தை நோக்கி குண்டுகள் பொருத்திய வாகனத்தை செலுத்தி வந்ததாகவும், இந்த தாக்குதலில் பெருமளவான பல்கலைக்கழக மாணவர்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் அரசின் செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 10 பேர் கொல்லப்பட்ருந்தனர். அந்தத் தாக்குதலுக்கு அல் சபாப் என்ற அமைப்பு உரிமை கோரியிருந்தது. இந்த அமைப்பு 3 தாக்குதல்களை கடந்த நவம்பர் மாதம் நடத்தியிருந்தது. அதில் 52 பேர் கொல்லப்பட்டும் 100 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துமிரு ந்தனர்.

உருமறைப்பு ஆடைகள் விற்பனைக்கு

சிறீலங்காவில் தடை

சிறீலங்காவில் படையினர் அணிவதைப் போன்ற உருறைப்பு ஆடைகள் விற்பனை செய்வதை சிறீலங்காவின் புதிய அரசு தடை செய்துள்ளது.

இந்த ஆடைகளின் விற்பனையானது, நாட்டில் குற்றங்கள் அதிகரிக்க காரணமாகியுள்ளதாகவும், அதனை அணிபவர்களை படையினர் என மக்கள் எண்ணுவதாகவும் சிறீலங்கா அரசு தெரிவித்துள்ளது.

சிறீலங்காவில் போர் இடம்பெற்ற போது இவ்வாறான தடைகள் இருந்தன, ஆனால் அது அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது. எனினும் தற்போதைய தடையானது எந்த சட்டத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டுள்ளது தொடர்பில் குழப்பங்கள் நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

திட்டமிட்டு அழிக்கப்படும் கிழக்கின் வளங்கள்.

தமிழ் மக்கள் வாழமுடியாத நிலை ஏற்படுமா?

இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொடக்கம் வடகிழக்கு மக்கள் தமது தாயத்தினையும் தமது மண்ணையும் பாதுகாக்க இன்று வரையில் போராடியே வருகின்றனர்.

தமிழ் மக்கள் அகிம்சை ரீதியாக போராடி, பின்னர் ஆயுத ரீதியான போராட்டத்தினை மேற்கொண்டு பல்லாயிரக் கணக்கான உயிர்களையும் பல்லாயிரக் கணக்கான கோடி பொருட் சேதங்களையும் எதிர்கொண்டனர்.

தமது மண்ணைப் பாதுகாக்க போராடிய எமது இனம், இன்று எதனையும் பாதுகாக்க முடியாத நிலையில் தமது இருப்பினை இழந்து வருவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இந்த நாட்டில் பெரும்பான்மையினம் சிறுபான்மையினத்தினை சீரழிப்பதற்கு கடந்த காலங்களில் பல உக்திகளை முன்னெடுத்து வந்தது. தமிழ் மக்களுக்கு எதிராக கண்ணுக்குப் புலப்படாத வகையில் பல இன அழிப்பு செயற்பாடுகளை இந்த சிங்கள அரசு முன்னெடுத்து வருகின்றது. அதில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றுதான் மணற் கொள்ளை.

இன்று வடகிழக்கின் பெரும் வளங்களில் ஒன்றாக கருதப்படும் மண் வளம் சூறையாடப்பட்டு தெற்கிற்கும் வெளிநாடுகளுக்கும் கடத்தப்படும் நடவடிக்கைகள் சட்டம் என்ற ஒன்றை பாவித்து மிகவும் சூட்சுமமான முறையில் முன்னெடுக்கப்படுகின்றது.

எதனை பாதுகாக்க நாங்கள் 30வருடமாக ஆயுதம் ஏந்தி போராடினோமோ அதனை நாங்கள் பாதுகாக்க முடியாத நிலையில் இருக்கின்றோம்.

வடகிழக்கின் எல்லைப் பகுதிகள் இன்று மண் கொள்ளையின் பெயரினால் அழிக்கப்படுகின்றன. வளம் கொழிக்கும் பகுதிகளை பாலைவனமாக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர், சிங்கள பகுதிகளில் நீர் ஏந்து பகுதிகளில் முன்னெடுத்துவரும் மணல் அகழ்விற்கு தடை விதித்துள்ள அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தினை மணல் அகழ்விற்கான பகுதியாக அடையாளப்படுத்தியுள்ளது.

அனைத்து வளங்களையும் கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை பிரதேசம் இன்று மணல் கொள்ளையின் பரிமாணமாக மாற்றமடைந்து வருகின்றது. இது எதிர் காலத்தில் படுவான்கரை என்னும் பகுதி இருந்ததற்கான அடையாளம் இல்லாத நிலையினை ஏற்படுத்துவதற்கான சூழ்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

யுத்த காலத்தில் தமிழீழ காவல்துறையினர் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரையில் பாதுகாத்து வைத்திருந்த இயற்கை வளங்கள் அனைத்தும் இன்று காவு கொள்ளப்பட்டு வருகின்றன.

மலைகள் உடைக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றன, காடுகள் அழிக்கப்படு கின்றன. பாரிய மரங்கள் வெட்டப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றன. இவற்றில் முக்கியமாக மண் அகழ்வு துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றது.

இன்று தினமும் தெற்கில் இருந்து வரும் நூற்றுக் கணக்கான வாகனங்கள், மண்ணை கடத்திச் செல்லும் நிலையேற்பட்டுள்ளது. இந்த மண் கொள்ளைக்கு மட்டக்களப்பு அரச நிர்வாகம் பக்கத் துணையாக இருப்பதாக பொது மக்களினால் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவு, கிரான் பிரதேச செயலாளர் பிரிவு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவு, வாகரை பிரதேச செயலாளர் பிரிவு, பட்டிப்பளை பிரதேச செயலாளர் பிரிவு, வெல்லாவெளி பிரதேச செயலாளர் பிரிவு போன்ற பகுதிகளில் இந்த மண் அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக ஏறாவூர்ப்பற்று பிரதேசம் மண் மாபியாக்களின் இருப்பிடமாக மாறிவருகின்றது. இதற்கு துணையாக சிங்கள அரசியல்வாதிகளுடன் எமது சுயநலம் கொண்ட அதிகாரிகளும் இருப்பதுதான் கவலையான விடயமாகவுள்ளது.

ஏறாவூர்ப்பற்று நீர்வளமும் வயல் வளமும் நிறைந்த பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் யுத்ததிற்கு பின்னர் பாரியளவில் மண் அகழ்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதன் காரணமாக மழை காலங்களில் ஏறாவூர்ப்பற்று பிரதேசத்தின் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கும் நிலையேற்பட்டுள்ளதுடன், கோடை காலத்தில் பாரிய வறட்சி நிலையினையும் எதிர்கொள்ளும் நிலையேற்பட்டுள்ளது.

கிருஸ்ணா

இப்பகுதியில் முன்னெடுக்கப்படும் மண் அகழ்வுகளை நிறுத்துமாறு பல தரப்பினராலும் கோரிக்கைகள் முன்வைக்கப்படுகின்ற போதிலும், அவற்றில் அரசாங்கம் எந்தவித கரிசனையும் காட்டாது தொடர்ந்து மண் அகழ்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இப்பகுதியில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் மண் அகழ்வுகள் காரணமாகவே அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்ததின் போது மாவடியோடை அணைக்கட்டு நீரில் உடைத்துச் செல்லும் நிலைமையினையும் உருவாக்கியிருந்தது.

யுத்ததிற்கு பின்னரான காலம் தொடக்கம் இந்த மண் அகழ்வினால் மட்டக்களப்பு மாவட்டம் பாரிய பிரச்சினைகளை எதிர் கொண்டு வரும் நிலையில், அவை தொடர்பில் எந்த கரிசனையும் காட்டாத நிலையே இருந்து வருகின்றது.

குறிப்பாக இந்த மண் அகழ்வினை, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரசியல்வாதிகளும் அரசாங்க அதிகாரிகளும் ஒரு சாதாரண விடயமாக எடுத்துக் கொள்ளும் நிலையில், அது தொடர்பில் கரிசனையற்ற நிலையிலேயே இருந்து வருகின்றனர்.

இதற்கு பொறுப்பான அதிகாரிகளிடம் இது தொடர்பில் வினவிய போது, இதற்கான பதிலை வழங்குவதில் தாங்கள் பல சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் மட்டக்களப்பில் மண் அகழ்வதினை தீர்மானிப்பது தெற்கில் இருக்கும் அரசியல்வாதிகளின் கைகளில் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும்மண் அகழ்வுகள் இன்னும் பத்து வருடங்களில் தமிழர்களின் இருப்பினை கேள்விக் குறியாக்கும் என சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு நாளைக்கு மட்டக்களப்பில் இருந்த சுமார் 1000 கியூப் மண்கள் வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாகவும், இது

மாவட்டத்தின் இயற்கை வளங்களையும் மக்கள் குடித்தொகையையும் பாரிய சிக்கல் நிலைக்குள்ளாக்கும் நடவடிக்கையெனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

தொடர்ச்சி 13ம் பக்கம்

ஆழிப்பேரலை அனர்த்தம் 15 ஆண்டுகள்

இறந்த மக்களையும், தம்மை காப்பாற்றிய தமிழீழ அரசையும் நினைவு கூர்ந்த மக்கள்

கடலை நம்பி தொழில் செய்து வாழ்ந்து வந்த மக்களை கடலின் சீற்றமே பலிவாங்கிய துன்பமான நிகழ்வின் 15 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு கடந்த வாரம் தமிழர் தாயகத்தின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உணர்வுபூர்மாக இடம் பெற்றது.

உறவுகளை பறிகொடுத்த மக்கள் கண்ணீருடன் அவர்களை நினைவு கூர்ந்தது, அதில் பங்கெடுத்தோரை கண்கலங்க வைத்தது.

உடுத்துறை மற்றும் முல்லைத்தீவு கடற்கரை ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள நினைவாலயங்கள் உட்பட வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள பல நினைவாலயங்களிலும், ஆலயங்களிலும் மக்கள் தமது அஞ்சலிகளைச் செலுத்தி மரணமடைந்தவர்களை நினைவு கூர்ந்திருந்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆழிப்பேரலை காரணமாக அதிக உயிரிழப்பினை எதிர்கொண்ட மட்டக்களப்பு திருச்செந்தூர் பகுதியில் உள்ள ஆழிப்பேரலை நினைவுத்தூபியில் நினைவேந்தல் நிகழ்வு உணர்வூர்வமாக நடைபெற்றது.

ஆழிப்பேரலை பேரனர்த்தம் காரணமாக இப்பகுதியில் 243 பேர் உயிரிழந்துள்ள நிலையில் அவர்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியருகே நிகழ்வு உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் நாள் இந்தோனேசியாவில் இடம்பெற்ற பூமி அதிர்வைத் தொடர்ந்து ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தம் பல நாடுகளைத் தாக்கியது. இந்த அனர்த்தம் சிறீலங்காவைத் தாக்கிய போதும் சிறீலங்காவின் வடக்கு கிழக்கு மாகாணங்களே அதிகளவான பாதிப்புக்களைச் சந்தித்தது.

தமிழீழத்தில் முல்லைத்தீவு, அம்பாறை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் கரையோரப் பிரதேசங்கள் ஆழிப்பேரலையால் தாக்கப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் கடலால் அள்ளுண்டு போயினர்.

இதில் முல்லைத்தீவில் அதிகளவிலான மக்கள் கொல்லப்பட்டனர். தமிழீழத்தில் பலிகொள்ளப்பட்ட மக்களின் தொகை இருபதாயிரம் ஆகும்.

சிறீலங்காவில் கொல்லப்பட்ட மொத்த மக்கள் தொகையில் இது மூன்றில் இரண்டு பகுதியாகும். அதிகளவு பாதிப்படைந்த தமிழர் தாயகப் பிரதே

ஆர்த்திகன்

சத்தை அன்றைய சிறீலங்கா அரசு புறக்கணித்த போதும், அன்று நடைமுறையில் இருந்த தமிழீழ அரசு முன்னெடுத்த மீட்புப் பணிகள் மற்றும் மீள்கட்டுமானப் பணிகள் பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

மிகவும் குறைந்த வசதிகளுடன் ஒரு நாட்டுக்குரிய செயற்திறனுடன் தனது மக்களை காப்பாற்றிய தமிழீழ அரசின் அன்றைய நடவடிக்கைகள் எமது வரலாற்றில் பதிவாகியுள்ளது.

இந்தோனேசியாவிற்கு அடுத்து ஆழிப்பேரலையின் நேரடி ஆக்ரோசத்திற்கு ஆட்பட்ட பகுதி தமிழீழ தன்னாட்சி பிரதேசம் ஆகும். இலங்கை அரசின் கட்டுமானத்தினைவிட வலிமை குறைந்த கட்டுமானத்தினை வைத்துக்கொண்டு தமிழீழ அரசு மிகச்சிறந்த பணியை செய்தது. ஆழிப்பேரலை தாக்கிய பிறகு ஏற்படும் கட்டுமான சிதைப்பானது, மருத்துவ-உணவு உதவிகளை கொண்டு செல்வதற்கு ஏற்றதாக இருக்காது.

மக்களை, கிராமங்களை, காயம்பட்டவர்களை சென்று சந்தித்து மீட்காவிடில், இறந்த உடல்களில் இருந்து வெளியாகும் கிருமிகள் நோய்களைத் தோற்றுவிக்கும். இது தொற்று நோயாக பரவி மேலும் பல அழிவுகளை கொண்டுவரும். மேலும் தூய்மையற்ற தண்ணீரை குடிப்பதன் மூலமும் தொற்று நோய்கள் பரவும் என்பதால் சுத்தமான நீரை பாதிக்கப்பட்ட கடற்கரை பகுதிக்கு கொண்டு சேர்த்தல் அவசியம். தொடர்ந்து உணவு கொடுத்தல், தங்கவைத்தல், உடைகளை கொடுத்தல் என அனைத்து உதவிகளும் 24 மணி நேரத்திற்குள் கொண்டு செலுத்தப்பட வேண்டும்.

இதை ஒரு அரசாங்கமே செய்து முடிக்கும் தன்மையுடனும், தயாரிப்புடனும் இருக்குமா எனக் கூற இயலாது. தமிழகத்தில் மூன்று, நான்கு நாட்களுக்கு பின்னர் இறந்த உடல்களை கண்டறிந்த நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன. அதாவது முழுமையடைந்த அரசால் அல்லது வளர்ச்சியடைந்த நாடுகளால் செய்யப்படும் செயலை அர்ப்பணிப்புடன் செய்வது என்பது விடுதலைப் போராளிகளால் மட்டுமே சாத்தியமாகும்.

தமிழீழ அரசு, இலங்கை அரசினை விட வேகமாகவும், அக்கறையுடனும் செயல்பட்டது. இலங்கை அரசு சர்வதேசத்தினால் கொடுக்கப்பட்ட உதவிப் பொருட்களை தமிழர் பகுதிகளுக்கு அனுப்பவோ, பகிர்ந்து கொள்ளவோ விரும்பவில்லை மட்டுப்படுத்தப்பட்ட உதவிகளையே வழங்கியது. ஆனால் தமிழீழ அரசு இலங்கை ராணுவத்தின் கட்டுபாட்டு பகுதியில் இருந்த பகுதிகளுக்கு சென்று அங்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கும் உதவிகளை வழங்கியது.

விடுதலைப்புலிகளின் துரிதமான செயற்பாடுகள் மற்றும் மீட்புப் பணிகளை அன்று வெளிநாட்டு ஊடகங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் வெகுவாக பாராட்டியிருந்தன.

முல்லைத்தீவிற்கு ஜனவரி மாதம் 2005 ஆண்டு அழிவுகளைப் பார்வையிட சென்ற அன்றைய யுனிசெப் தலைமை இயக்குநர் கரோல் பெலாமி தமிழீழ விடுதலைப் புலிகளின் மீட்புப் பணியையும் நிவாரண வழங்கலில் உள்ள திட்டமிடலையும் வெகுவாகப் பாராட்டினார். அமெரிக்காவில் "சிக்காக்கோ றைபியூன்" என்ற பத்திரிகை 2005 ஆண்டு தமிழீழ நிர்வாகத் திறமையைப் பட்டியலிட்டதுடன் தனிநாட்டிற்குரிய செயற்பாடுகளைக் கொண்டதெனவும் விபரித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழீழ அரசு நடத்தப்பட்ட முறைமைகளைப் பற்றி பல்வேறு ஆவணப்படுத்தல்களை நாம் மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் தமிழர்கள் எப்படியான அரசினை நடத்தினார்கள் என்பதையும், ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ் மக்கள் நடத்தப்படும் முறையையும் சர்வதேசத்திடம் சொல்ல வேண்டியது காலத்தின் தேவை.

அழிவின் விளிம்பில் நெடுங்கேணி எல்லையோர தமிழ்க் கிராமம்

கோ.ரூபகாந்

வவுனியா மாவட்டம் நெடுங்கேணி பிரதேச செயலகர் பிரிவுக்கு உட்பட்ட எல்லையோரத் தமிழ்க் கிராமங்களின் நிலங்கள் சிறீலங்கா அரசின் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களிளால் சிங்களமயமாகி வருகின்றது.

மாகாவலி L வலையத்தில் பல தமிழ் கிராமங்கள் சிங்களப் பெயர்களுடன் சிங்களக் கிராமமாகவே மாறிவிட்டது. போகஸ்வெவ, கழியாணபுர, நாமல்புர, என பல நாமங்கள் சூட்டியதுடன், அங்கு தென்னிலங்கை சிங்கள மக்களை அழைத்து வந்து குடியமர்த்தியுள்ளனர். அவர்களுக்குத் தேவையான காப்பெற் வீதி, மின்சாரம், போக்குவரத்து வசதி, வீட்டுத் திட்டம் போன்ற பல நலத்திட்டங்களை முன்னெடுத்து

மோட்டை, கீரிசுட்டான் போன்ற கிராம மக்களுடன் சகோதர உணர்வுடன் உழுதுண்டு வாழ்ந்தனர்.

இவ்வாறு வெறும் வார்த்தைகளினால் ஒப்பிட்டு வர்ணிக்க முடியாத வெடிவைத்தகல் கிராமத்திற்கு நிலைமாறிய தருணம் 1990ஆம் ஆண்டு காலப் பகுதியாகும். தாயகத்தில் அரங் கேறிய கொடிய போரினால் உறவுகளைத் தொலை த்தும், உடைமைகளை விட்டும், கிராமத்தில் தமக்குத் தாமே எஜமானர்களாக வாழ்ந்த மக்கள் உள் நாட்டுக்குள்ளேயே அகதிகளாகளாக் கப்பட்டனர்.

அன்று கிராமத்தை விட்டு வெளியேறிய மக்களில் ஒரு தொகுதியினர் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், போன்ற இடங்க ளிலும் சிலர் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கும் சென்று அகதிகளாக தஞ்சமடைந்தனர். பல வருட ங்களாக யாருமற்ற நிலையில் இருந்த கிராமம் அடர்ந்த காடுகளாக மாறியதுடன் யானைகள், மற்றும் வனவிலங்குகளின் இருப்பிடமாகவும் மாறியது.

கடந்த 2009ஆம் ஆண்டு இறுதிப் போரில் வன்னி நிலப்பரப்பில் வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்து வவுனியாவில் உருவாக்கப்பட்ட தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டு

சிங்கள அரசியல் சக்திகளின் நீண்டகால நிலஅபகரிப்பு, சிங்களக் குடியேற்றம் போன்ற திட்டத்தன்படியே வெடிவைத்தகல் கிராம மக்கள் தாமாகவே வெளியேறினர். தமிழ் மக்கள் வாழும்

கிராமங்களின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அரசியல் சக்திகள் பல முட்டுக்கட்டையாகவே இருக்கின்றனர். எல்லையோர சிங்களக் கிராம மக்களுக்கு வழங்கப்படும் அரச சலுகைத் திட்டங்கள் தமிழ் மக்கள் வாழும் கிராமங்களிலும் நடைமுறைப்படுத்தினால் தமிழ் கிராமங்களும் அழிவின் நிலையிலிருந்து காப்பாற்றப்படும்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகள் மக்கள் பிரதிநிதிகள் கிராமத்தில் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்கு முன்வரவேண்டும். வீதி, போக்குவரத்து, மின்சாரம், மருத்துவம், பாடசாலை மற்றும் வன விலங்குகளிடமிருந்து பாதுகாப்பாக வாழ யானை மின்சார வேலி போன்ற வசதிகள் ஏற்படுத்திக் கொடுத்தால் வெடிவைத்தகல் கிராமம் மீண்டும் எழுச்சி பெறுமென்பதில் ஐயமில்லை.

இதேவேளை, வெடிவைத்தகல் கிராமத்தில் வாழ்ந்த பலர் தற்போது புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். நீர்வளமும் நிலவளமும்

வருகின்றனர்.

இந்நிலையில், தமிழர்களின் பூர்வீக கிராமங் களில் ஒன்றான நெடுங்கேணி வெடிவைத்தகல் தமிழ்க் கிராமம் தற்போது கவனிப்பாரற்று அழிவின் விளிம்பில் உள்ளது.

வெடிவைத்தகல் கிராமத்தில், பூர்வீகமாக வாழ்ந்த சிவகுரு என்ற கிராமவாசியின் மகனின் குடும்பம் மட்டுமே, குறித்த கிராமத்தில் நிரந்தர மாக வசித்து வருகின்றனர். நூற்றுக் கணக்கான குடும்பங்கள் வாழ்ந்த மண்ணில் தற்போது ஒரேயொரு குடும்பம் மாத்திரமே வாழ்ந்து வரும் அவல நிலை காணப்படுவதுடன், இக்கிராமம் அழிவடையும் தறுவாயில் உள்ளதும் வேதனைக் குரிய விடையமே.

கிராமத்தின் வரலாறு

பண்டாரவன்னியன் காலத்தில் வெள்ளை யர்களுடன் முதல் போர் வெடிவைத்தகல் கிராமத்திலேயே நடைபெற்றது. இக் கிராமத்தில் உள்ள பாறைத் தொடர்களில் துளை அமைத்து வெடிவைத்து போர் செய்து வெற்றி பெற்ற காரண த்தினாலேயே குறித்த கிராமத்திற்கு வெடி வைத்தகல் என்ற பெயர் சூட்டப்பட்டதாக கிராம வாசிகளின் முன்னோர்கள் கூறியிருக்கின்றார்கள்.

வவுனியா வடக்கில் விவசாயத்திற்கு பெயர் பெற்ற கிராமங்களில் வெடிவைத்தகல் கிராமமும் ஒன்றாகும். இரண்டு பக்கங்களும் நதி நீரினால் பிணைக்கப்பட்ட அழகிய விவசாயக் கிராமம். பச்சைப்பசேலென வயல் நிலங்கள். மூன்று போக மும் நெல் விளையும் சொர்க்க பூமி. பசியென்று வருபவர்களுக்கு விருந்து வைத்து வீடு செல்லும் போது நெல், அரிசி, குரக்கன், தினை, பால், தயிரென கட்டிக் கொடுக்கும் மனப்பாங்குடைய மக்கள் மகிழ்வுடன் வாழ்ந்த மண். அயல் கிராமங் களான மருதோடை, ஊஞ்சல்கட்டி, காஞ்சுர

வார்த்தைகளால் சொல்ல முடியாத பல துன்பியல் சம்பவங்களை அனுபவித்து 2010ஆம் ஆண்டிலி ருந்து படிப்படியாக அவரவர் ஊர்களில் மீள் குடியேற்றப்பட்டனர்.

2010ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் வெடிவைத்தகல் கிராமத்தில் ஒருசில குடும்பங் கள் குடியேறி வாழ்ந்து வந்தனர். அங்கு வசிக்கும் மாணவர் களின் கற்றல் செயற்பா டுகளுக் காக ஆர ம்பப் பாட சாலை ஒன்றும் கட்டப்ப ட்டது. ஆனால் பலவருட ங்கள் காடாக இருந்த கிராமத்தி ல் மக்கள் குடியமரு ம் போது வனவிலங்குகளினால் உயிராபத்துக்கள் ஏற்பட்டது. கிராமத்துக்கான போக்குவரத்து, மருத்துவம், மின்சாரம் போன்ற வசதிகள் அரசினால் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. இதனால் மீள்குடியேறிய மக்கள் வெடிவைத்தகல் கிராமத்தில் வாழ்வதற்கு விருப்பின்றி மீண்டும் ஊரைவிட்டு வெளியேறி விட்டனர்.

ஒருங்கே அமைந்த வெடிவைத்தகல் கிராமத்தை சிங்களக் குடியேற்றங்களில் இருந்தும் நில அபகரிப்பிலிருந்தும் பாதுகாக்க உங்கள் முதலீடு களை கிராமத்தில் செய்து மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குங்கள். உங்கள் உறவு களுக்கு உதவி செய்யுங்கள். அவர்களை சொந்த மண்ணில் வாழ்ந்து, விவசாயம் செய்வதற்கு ஒத்துழைப்புக்களை வழங்குங்கள். அதே போல உள்நாட்டில் நகர்ப்பகுதிகளில் வாழும் மக்களும் வெடிவைத்தகல் கிராமத்தில் குடியேறி வாழ்ந் தால், மீண்டும் கிராமம் செழிப்புடைய கிராமமாக எழுச்சி பெறும். புலம்பெயர் உறவுகளாகிய உங்களின் கரங்களிலேயே எமது பூர்வீக கிராம ங்கள் உள்ளன. அவற்றை பாதுகாக்க வேண்டியது ஒவ்வொரு தாயகத் தமிழரின் பாரிய கடமையாகும்.

வவுனியா வடக்கை தக்க வைப்பதற்கு தமிழ் கட்சிகளிடம் ஒற்றுமை வேண்டும்

தவிசாளர் தணிகாசலம்

வவுனியா வடக்கு பிரதேசம் என்பது படிப்படியாக சிங்கள ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு வரும் ஒரு பாரம்பரிய தமிழ் பிரதேசம். இங்கு வாழும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதேச சபையிலும் சிங்கள சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இந்த நிலையில் வவுனியா வடக்கு பிரதேச சபையினால் முன்வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாக தோற்றடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சபையின் தவிசாளர் திரு சபாரத்தினம் தணிகாசலம் அவர்கள் இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய கருத்துக்களை நாம் இங்கு தருகின்றோம்.

வவுனியா வடக்கு பிரதேச சபை யின் 2020ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகவும் சபையில் தோல்வியை தழுவியிருக்கின்றது. 26 உறுப்பி னர்களைக் கொண்ட இன்றைய அவையில் வரவு செலவுத் திட்டத்திற்கு சார்பாக 9வாக்கு களும், எதிராக 13வாக்குகளும் பெற்று, நான்கு வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியைத் தழுவியது என்ற கசப்பான விடயத்தை பதிவு செய்ய விரும்பு கின்றேன்.

காரணம் எங்களுடன் இருமொழி பேசுகின்ற உறுப்பினர்கள் சபையில் அங்கம் வகிக்கின்றனர். இவர்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சார்ந்த 8 உறுப்பினர்களைவிட ஈ.பி.ஆர்.எல்.எப் ஐச் சேர்ந்த 3உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அல்லது தமிழ்க் காங்கிரசைச் சேர்ந்த 3 உறுப்பினர் களும் அங்கம் வகிக்கின்றார்கள். இவர்களைவிட பெரும்பா ன்மை இனத்தைச் சேர்ந்த, பொதுஜன பெரமுன கட்சியின் 5 உறுப்பினர்களும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 2உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும், ஜே.வி.பியைச் சேர்ந்த ஒரு உறுப்பினரும், ஐக்கிய சுதந்திர முன்னணியைச் சேர்ந்த ஒரு உறுப்பினரும் எங்களுடன் இருக்கின்றார்கள்.

இவர்களில் சுதந்திர முன்னணியைச் சார்ந்த வரும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர்களும் கடந்த காலங்களில் எங்களுடன் ஆட்சியமைக்க ஒத்துழைத்தார்கள். இந்த நிலையில் தான் இந்த சபை நடவடிக்கைகளை நடத்திக் கொண்டிருக் கின்றோம். இது நாங்கள் சமர்ப்பித்த இரண்டாவது வரவு செலவுத் திட்டம். அந்த வகையில் அவர்கள் இதனை மக்களின் நலன் கருதி நமக்குத் தேவையான அல்லது பிரதேச அபிவிருத்திக்குத் தேவையான விடயம் என்ற ஒரு நோக்கில்லாது, வெறுமனே அரசியல் சார்ந்த, ஒரு குரோத மனப்பான்மை கொண்ட ஒரு எண்ணத்தோடு ஈ.பி.ஆர்.எல்.எப்ஐச் சேர்ந்த 3 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 3 உறுப்பினர்களும் சேர்ந்து எங்களுடைய இந்த வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்திருந்தனர்.

> **“வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்திருந்ததன் மூலம் அபிவிருத்தியையும், பிரதேசத்தின் நலன்களையும், மக்களின் தேவைகளையும் அலட்சிய மனப்பான்மையுடனும் ஒரு விரோத மனப்பான்மையுடனும், நடந்து கொண்டதன் மூலம் இந்த வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது”**

இந்த வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்திருந்ததன் மூலம் இந்தப் பிரதேசத்தின் அபிவிருத்தியையும், இந்தப் பிரதேசத்தின் நலன் களையும், மக்களின் தேவைகளையும் ஒரு அலட்சிய மனப்பான்மையுடனும் ஒரு விரோத மனப்பான்மையுடனும், அவர்களுக்கு இதைச் செய்து விடக்கூடாது என்ற எண்ணத்தோடும் இவ்வாறு நடந்து கொண்டதன் மூலம் இந்த வரவு செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கின்றது. இதன் காரணமாக நான் மிகவும் கவலை யடைகின்றேன். காரணம் என்னவெனில், இந்தப் பதவிகளில் இருப்பது முக்கியமல்ல. வவுனியா வடக்கு என்பது நூறு வீதம் தமிழ் பேசும் மக்களைக் கொண்டதொரு பிரதேசம்.

இங்கு பலவந்தமாக இணைக்கப்பட்ட 5 வட்டாரங்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட 5 பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த உறுப்பினர் களும், அவர்களுக்கு நியமன உறுப்பினர்களாக வந்த ஏனைய கட்சிகள் பலவற்றையும் சேர்ந்த 5 உறுப்பினர்களுமாக சேர்ந்து 10 உறுப்பினர்களும் சேர்ந்து வாக்களித்ததன் மூலம் பெரும்பான்மை இன உறுப்பினர்களின் எண்ணங்களை இவர்கள் நிறைவேற்றியதைப் போன்ற ஓர் உணர்வை நான் உணர்கின்றேன். இது ஒரு பாரதூரமானதும், மக்கள் விரோத போக்கை உடையதுமான செயலா கவே நான் இதனைப் பார்க்கின்றேன். காரணம் என்னவென்றால், எது எப்படியிருப்பினும் கட்சி யைச் சார்ந்த அரசியலுக்கு அப்பால் வவுனியா வடக்கு தமிழ் மக்கள் வாழ்கின்ற ஒரு பூர்வீக பிரதேசம். இங்கே நாங்கள் ஒரு அபிவிருத்தியைச் செய்யும் போது, கட்சிகளின் கொள்கைகளுக்கு அப்பால், பிரதேச மக்களின் நலன்களைச் சார்ந்து செயற்பட வேண்டிய இந்தத் தருணத்திலே அவர் கள் இவ்வாறான செயல்களை செய்தது மிகுந்த வேதனையை அளிக்கிறது.

இதன் மூலம் அவர்கள் என்ன சாதிக்க நினை க்கின்றார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை. ஆகவே எதிர் காலத்தில் கட்சித் தலைமைகளும் இவர்களும் உரிய கோணத்தில் இந்தப் பிரச் சினைகளை அணுகி, இந்தப் பிரதேசத்தில் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்க வேண்டிய உயரிய சிந்தனைகளை அவர்கள் கொண்டு, எதிர்காலத் தில் செயற்பட முனைய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே மக்களுக்குத் தெளிவு படுத்த விரும்புகின்றேன்.

இவ்வாறு இல்லாவிடில் இப்பிரதேசத்திலே மாற்றுச் சக்திகள் உருவாவதற்கும், நிலமைகள் மாறிச் செல்வதற்குமான வாய்ப்புகள் அதிக மாகவே காணப்படுகின்றது. இதனை எமது மக்கள் எவ்வாறு ஏற்றுக் கொள்வார்கள் அல்லது நிராகரிப்பார்கள் என்பதை குறிப்பாக சொல்வ தற்கு எனக்குத் தெரியவில்லை. ஆகவே இந்த இடத்திலே நான் திரும்பவும் வலியுறுத்திச் சொல்ல விரும்புவது என்னவென்றால், எங்களு டைய கட்சியைச் சாராத ஈ.பி.ஆர்.எல்.எப்உம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சார்ந்தவர் களும் இனம் சார்ந்தது என்பதைவிட, இந்தப் பிரதேசத்தை நாங்கள் தக்க வைத்துக் கொண்டு இந்த மக்களுக்கு நாங்கள் சேவையாற்ற வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனைகளை கொண்டு இவர்கள் மாறவேண்டும் என்ற வேண்டுகோளை நான் அவர்களுக்கு முன்வைக்க விரும்புகின்றேன்.

கடும்போக்கு அரசுக்கு எதிராக நாம் அணிதிரண்டுள்ளோம்

லீலாவதி

தொடரும் வலிந்து காணாமலாக்கப் பட்டோருக்கான நீதி வேண்டும் போராட்டத்தின் தற்போதைய நிலை குறித்து இலங்கை வடக்கு, கிழக்கு மாவட்டங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளரான லீலாவதி ஆனந்தராஜா அவர்கள் இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணல்

கேள்வி:

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கான நீதி வேண்டி மூன்று வருடங்களுக்கு மேலாக தொடர் போராட்டங்களை நடாத்தி வரும் உறவுகளின் சார்பில், இப்போராட்டத்தின் தற்போதைய நிலை பற்றியும் எதிர்வரும் 30 திகதி நடக்கவிருக்கும் பேரணி தொடர்பாகவும் கூற முடியுமா?

பதில்:

தற்போதைய சூழ்நிலையில் புதிய ஜனாதிபதி அவர்கள் பதவியேற்றுள்ளார். அவர் எமது பிள்ளைகள் கையளிக்கப்பட்ட போதும், கடத்தப்பட்ட போதும் பாதுகாப்பு செயலாளராக இருந்தவர். அவர் அண்மையில் வடக்கு கிழக்கைச் சேர்ந்த நான்கு கிறிஸ்தவ மத குருமாரைச் சந்தித்த போது, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று எவருமில்லை. எல்லோரும் யுத்தத்தின் போதே இறந்து விட்டனர் என்று கூறியிருந்தார். அந்தக் கூற்று பொய்யானது என்பதை எல்லோராலும் உணர முடியும். ஏனெனில் யுத்தம் முடிவடைந்த பின்னர் இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளில் வைத்து வைத்து எமது பிள்ளைகளை கையளித்திருந்தோம். மேலும் பலரை வெவ்வேறு காலப் பகுதிகளில் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளில் வைத்து கைது செய்திருந்தனர். இவர்கள் எல்லோரும் போரின் போது இறந்து விட்டார்கள் என்றுநம்ப முடியாத ஒரு கூற்றை ஜனாதிபதி அவர்கள் கூறியிருக்கின்றார்கள். இதற்குக் கண்டனத்தை தெரிவிக்கும் முகமாகவும், தற்போதைய ஜனா திபதிக்கும், சர்வதேச நாடுகளுக்கும் இவ்வளவு அழுத்தமுள்ள அரசாங்கம் வந்த பின்னரும் எமது மக்கள் எம்முடன் நிற்கிறார்கள் எமது கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கின்றார்கள் என்பதற்கும், இத்தனையும் உண்மை என்பதை உலகிற்கு காட்ட அனைத்து மக்களும் ஒன்று திரள வேண்டும். ஒன்று திரண்டு எங்கள் எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்பதற்காகவே இந்தப் போராட்டத்தை ஒழுங்கு செய்தி ருக்கின்றோம்.

கேள்வி:

இலங்கையிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் உங்கள் போராட்டத்திற்கு,எந்த வகையில் ஆதரவு அல்லது வழிகாட்டல் வழங்கி வருகின்றனர்?

பதில்:

நாங்கள் எந்தவொரு அரசியல் கட்சியையும் சாராதபடியால், ஒட்டுமொத்தமாகஎந்தவொரு அரசியல் கட்சிகளோ அரசியவாதிகளோ எங்களுடன் பேசுவதில்லை, இணைந்து எம் நீதிக்கான போராட்டத்திற்கு ஒரே குரலில் வலுச்சேர்ப்பதில்லை. ஆனால் போராட்டங்கள் நடக்கும் போது வருவார்கள். ஆதரவு தெரிவிப்பார்கள், போவார்கள். அதைத் தவிர எமக்கு வழிகாட்டல் வழங்குவதாக இல்லை. அந்த விடயத்தைக் கூறித் தான் ஆகவேண்டும்.

கேள்வி:

போராட்டம் தொடர்பாக சட்டவல்லுநர்கள் எவ்வாறான கருத்துக்களை முன்வைத்திருக்கின்றார்கள்? இது தொடர்பாக உங்களுடன் பேசியிருக்கின்றார்களா?

பதில்

அவர்களாக முன்வந்து எந்தவித ஆலோசனைகளையும் வழங்கியது கிடையாது. ஆனால் ஒருசில ஆலோசனைகளை நாங்கள் கேட்கும் போது சொல்கின்றார்களே தவிர அவர்களாக முன்வந்து சொல்வதில்லை. எங்கள் பிள்ளைகள் நாட்டிற்காகவே காணாமல் போனவர்கள். எனவே அவர்களின் விடுதலையில் அனைவருக்கும் அக்கறையிருக்க வேண்டும். எனவே இவர்கள் தாமாக முன்வந்து எங்களுக்கு உதவி செய்ய வேண்டும். இவ்வளவு சட்டத்தரணிகள் இருந்தும், நாங்கள் எங்கள் கோரிக்கைகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்று கோரிக்கை விடுத்துக் கொண்டிருக்கின்றோம். இதற்கு ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தொடர்பாக நான் வேறு நேர்காணல்களின் போதும் கூறியுள்ளேன். வெளிநாட்டிலிருந்தோ, உள்நாட்டிலிருந்தோஎமது போராட்டத்திற்கு ஆலோசனைகளை வழங்க சட்டவல்லுநர்கள் எவரும் முன்வரவில்லை.

கேள்வி:

இந்த உணர்வுமிக்க போராட்டம் பல வருடங்களாக தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்தப் போராட்டத்திற்கு இளைஞர்கள் , மாணவர்களின் பங்கு எப்படியிருக்கின்றது?

பதில்

நாங்களாக போராட்டத்திற்கு அழைக்கும் போது தான் அவர்கள் அதில் கலந்து கொண்டிருக்கின்றார்கள். அதுகூட ஒரு குறிப்பிட்ட தொகையினரே வருகின்றனர். இளைஞர்களை அவர்களின் பெற்றோர்கள் அனுமதிக்காமையாலேயே அவர்கள் பங்களிப்பதில்லை. நாட்டில் நடக்கும் நிகழ்வுகள் தெரியும் தானே. பாதிக்கப்பட்டவர்களின் இளைஞர்கள்கூட போராட்டத்தில் பங்களிக்க வருவதில்லை. பெற்றோருக்குத் தெரியாமலேயே சிலர் வருவார்கள். அண்மையில் முஸ்லிம் மனித உரிமைகள் தொடர்பான ஒருவர் , இளைஞர்கள் போரட்டத்திற்கு வரவேண்டும் பங்களிக்க வேண்டும் என்பதை கோரிக்கையாகவே விடுத்திருந்தார். எனவே இளைஞர்கள் இந்த போராட்டங்களில் பங்களிக்க பயப்படுகின்றார்கள் என்பது அவர்களுக்கும் புரிந்திருக்கின்றது.

கேள்வி:

அரசியல் ராஜதந்திரிகள் அல்லது பன்னாட்டு தூதுவர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் உங்கள் போராட்டத்திற்கு எவ்வாறான பங்களிப்பைத் தருகின்றார்கள்? அவர்களின் பங்களிப்பு உங்களுக்கு இருக்கின்றதா?

பதில்:

ஆம். இருக்கின்றது என்று தான் சொல்ல வேண்டும். நாங்கள் கொழும்பிற்கு சென்று பன்னாட்டு தூதுவர்களையும் சந்தித்து எமது பிரச்சினைகளைக் கூறியிருந்தோம். அதேபோல் ஜெனீவாவிலும் சந்தித்து காணாமல் போனோருக்கான அலுவலகம் (OMP) எனும் அதிகாரமற்ற நிறுவனம் எமக்கான நீதியை இலங்கை அரசியலமைப்பு, மனித உரிமைகள் சட்ட ஒழுங்குகளின் கீழ் பெற்றுத்தருவதில்எவ்வகையிலும் பங்களிக்காது என்பதையு விளக்கமாகக் கூறியிருந்தோம். சட்ட ரீதியாகவும், அனுபவ ரீதியாகவும் அவர்களுக்கு விளங்கக்கூடிய வகையில் கூறியிருந்தோம். அவர்கள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டார்கள். ஏற்றுக் கொண்டாலும் நாட்டின் அரசியல் அழுத்தம் காரணமாகவோ என்னவோ தெரியாது, அவர்களும் OMP ஐ ஏற்றுக் கொள்ளுங்கள் என்றும் அதற்கு ஒருமுறை போய் பேசிப் பார்க்குமாறும் கூறுகின்றார்கள்.

கேள்வி:

பல காலமாக போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றீர்கள். புதிய அரசு பதவிக்கு வந்ததன் பின்னர், காணாமல் போன உங்களின் பிள்ளைகள் தொடர்பான தகவல்களோ அல்லது தீர்வுகளோ கிடைக்கும் என நீங்கள் நம்புகின்றீர்களா?

பதில்:

யுத்தம் முடிவடைந்த பின்னர் கையளித்த உறவுகளை யுத்தத்தில் இறந்து விட்டார்கள் என்று கூறமுடியாது. அது ஒரு நம்பத் தகுந்த விடயம் அல்ல என்பது அனைவருக்கும் தெரியும். எனவே எமக்கு இரண்டு பதில்களை மட்டுமே அவர்கள் தரவேண்டும். ஒன்று உங்கள் குழந்தைகள் இருக்கின்றார்கள். எங்கே இருக்கின்றார்கள், விசாரணைகள் முடிந்த பின்னர் விடுவிக்க ப்படுவார்கள் என்பது ஒரு பதில். அடுத்தது உங்கள் பிள்ளைகளுக்கு துரதிஸ்டவசமாக ஒரு சம்பவம் நடந்து விட்டது. எப்ப நடந்தது? எப்படி நடந்தது? யாரால் நடந்தது? யாரது ஆணையின்படி நடந்தது? என்பதை வெளிக் கொண்டுவர வேண்டும். அந்த பாதிப்பை ஏற்படுத்தியவர்களுக்கு தண்டனை கொடுக்க வேண்டும். ஏனெனில், வரும் காலத்திலும் இதேபோல் தமிழர்கள் கொன்றொழிக்கப் படக் கூடாது. இந்த இரண்டுமே செய்யப்பட வேண்டியதாகும். எங்களுக்கு அவர்கள் இரகசிய முகாம்களில் இருக்கின்றார்கள். விடுவிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கை உண்டு. விடுவிக்கப் படாதவர்களுக்கு என்ன நடந்தது என்று கூறப்பட வேண்டும்.

கேள்வி:

உங்கள் உணர்வுபூர்வமான போராட்டத்திற்கு புலம்பெயர்ந்த தேசங்களில் இருக்கும் உறவுகள் எவ்வாறான ஆதரவை உங்களுக்குத் தரவேண்டும் என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

பதில்:

இதுவரைகாலமும் அவர்கள் ஆதரவு

தொடர்ச்சி 13ம் பக்கம்

2019: மாற்றங்களின் ஆண்டு

அகிலன்

அரசியலில் அதிரடியான பல திருப்பங்களை ஏற்படுத்திய 2019 ஆம் ஆண்டு விடைபெற்றுச் செல்லப்போகின்றது. தமிழ் மக்களுக்கு எதனையும் பெற்றுத் தராத மற்றொரு ஆண்டாக இது அமைந்திருந்தது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல், ஆட்சி மாற்றம் என்பன இவ்வருடத்தின் முக்கிய நிகழ்வுகள். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஆட்சி மாற்றத்துக்கு வலுவான ஒரு காரணமாக அமைந்துவிட்டிருந்தமையையும் மறுதலித்துவிட முடியாது. கடந்து செல்லப் போகும் வருடத்தைப் பற்றிய தெளிவான ஒரு மதிப்பீடே புதிய வருடத்தில் எமக்கான உபாயங்களை வகுத்துக் கொள்ள உதவும்.

2019 பிறந்த போது அரசியலில் ஒரு குழப்பநிலை காணப்பட்டது. 2018 அக்டோபர் 26 இல் இடம்பெற்ற அரசியல் சதிப்புரட்சி அப்போது தான் முடிவுக்கு வந்திருந்தது. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி என்ற முறையில், ரணிலைப் பதவி நீக்கம் செய்து, மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக்கியிருந்தார். கடும் சர்ச்சைகளுக்கு மத்தியில் 52 நாட்கள் அதிகாரத்திலிருந்த மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், நீதிமன்றத் தீர்ப்பால் நீக்கப்பட்டு மீண்டும் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்ற நிலையில்தான் கடந்த வருடம் பிறந்திருந்தது.

அதாவது, அரசியலமைப்புக்கு விரோதமாக அதிகாரத்தைக் கைப்பற்றியவர்கள் என்ற முறையில், மக்கள் மத்தியில் ராஜபக்ஷக்களுக்கான ஆதரவுத் தளம் வீழ்ச்சியடைந்திருந்தது. மறுபுறத்தில் 52 நாள் சதிப் புரட்சியை முடிவுக்குக் கொண்டுவந்தவர் என்ற முறையில், ரணில் குறித்த 'இமேஜ்' உயர்ந்திருந்தது. ரணிலின் செல்வாக்கும் அதிகரித்திருந்தது. அவர் மீதான அனுதாபம் ஒன்றும் காணப்பட்டது. இது சிங்கள மக்களிடம் காணப்பட்ட ஒரு உணர்வு. இந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலுக்குச் சென்றால், கடும் போட்டியொன்றைக் கொடுக்கக்கூடிய ஒருவராக ரணில் இருந்தார்.

ஏப்ரல் 21 தாக்குதல்

ஏப்ரல் 21 (2019) தாக்குதல் இந்த நிலையை முற்றாக மாற்றியது. ஐ.எஸ் நடத்திய தாக்குதலில் 250 க்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்ட அதே வேளையில் பெருமளவு ஆயுதங்கள், வெடி பொருட்களும் கைப்பற்றப்பட்டன. ஆனால், இந்தத் தாக்குதலுக்கும் ஐ.எஸ் அமைப்புக்கும் இடையில் நேரடித் தொடர்பு எதுவும் இருக்கவில்லை. 'தேசிய தௌஹீத் ஜமா-அத்' என்ற உள்ளூர் அமைப்பே இந்தத் தாக்குதலை நடத்தியிருந்தது. 'தேசிய தௌஹீத் ஜமா-அத்' அமைப்பினால் இந்தியாவில் பயிற்றப்பட்டவர்களே இத்தாக்குதலை திட்டமிட்டு நடத்தியிருந்தார்கள். இவ்வாறான தாக்குதல் ஒன்று நடைபெறப் போகின்றது என்பதையிட்டு இந்தியப் புலனாய்வு நிறுவனங்கள் கொழும்பை முன்கூட்டியே எச்சரித்திருந்தன. ஆனால், இந்த எச்சரிக்கை ஏன் கவனத்தில் கொள்ளப்படவில்லை என்பதற்கான பதில் இன்று வரை இல்லை.

'தேசிய தௌஹீத் ஜமா-அத்' அமைப்பினர் கேட்டுக்கொண்டதையடுத்தே மூன்று நாட்களுக்குப் பின்னர் ஐ.எஸ் அமைப்பு இச்சம்பவத்துக்கு உரிமை கோரியது. சில மாதகாலமாகவே சோர்ந்து போயிருந்த ஐ.எஸ் அமைப்பு இத்தாக்குதலுக்கு உரிமை கோருவதன் மூலம் தம்மைப் பிரபலப்படுத்திக்கொள்ள முற்பட்டது. இச்சம்பவம் இலங்கையில் - குறிப்பாக சிங்கள மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியிருந்தது. ஐ.எஸ் மிகவும் இரகசியமான வலை அமைப்புக்களைக் கொண்டதாகவும், அதி நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் திறனைக் கொண்டதாகவும் இருப்பதும், அதில் இணைந்திருப்பவர்கள் உயிரைத் தியாகம் செய்வதற்குத் தயாராக இருப்பதாகச் சொல்லப்பட்டதும் ஆபத்தான ஒரு நிலையில் நாடு உள்ளது என்ற உணர்வு சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டது.

இராணுவ ஆய்வாளர்களும் இதற்கு ஏற்ற வகையான கருத்துக்களையே முன்வைத்தார்கள். அதாவது, ஐ.எஸ் அமைப்பை முறியடிக்க பல வருடங்கள் செல்லலாம். ஏனெனில் அவ்வமைப்பு ஆழமாக வேரூன்றியிருக்கின்றது என்ற கருத்து அவர்களால் முன்வைக்கப்பட்டது. பலமான ஒரு அரசியல் தலைமையும், இராணுவக் கட்டமைப்பும் இருந்தால் மட்டுமே இதனை முறியடிக்க முடியும் என்பது தான் அவர்களுடைய கருத்தாக வெளியிடப்பட்டது. ஐ.எஸ் பயங்கரவாதத்தை முறியடிக்கக்கூடியவர் கோத்தாபயதான் என்ற கருத்து சிங்களவர்கள் மத்தியில் இதன் மூலம் விதைக்கப்பட்டது.

கோத்தாவின் வியூகம்

கோத்தாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது தான் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் முதலில் தூண்டிவிடப்பட்டன. கோத்தாவால் உருவாக்கப்பட்ட பொதுபலசேனா போன்ற அமைப்புக்கள் முஸ்லிம்களின் வர்த்தக, அரசியல் மேலாதிக்க நிலையைத் தகர்ப்பதை இலக்காகக் கொண்டு தான் செயற்பட்டன. இதன்மூலம் முஸ்லிம்களின் அரசியல் - வர்த்தக மேலாதிக்கத்தை இல்லாதொழிக்கக்கூடிய ஒருவர் என்ற 'பிம்பம்' கோத்தா தொடர்பில் உருவாகியிருந்தது. முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைகள் அனைத்தும், அவர்களுடைய வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைகள், உணவகங்களை இலக்காகக் கொண்டவையாகவே இருந்துள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதை இலக்காகக் கொண்டு இரண்டு அமைப்புக்களை 2015 ஆம் ஆண்டிலேயே கோத்தாபய உருவாக்கியிருந்தார். எலிய, வியத்மக என்பனவே அந்த இரண்டு அமைப்புக்கள். இரண்டுமே பெருமளவுக்கு சிங்கள புத்திஜீவிகளை உறுப்பினர்களாகக் கொண்டது. தற்போது பாதுகாப்புச் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கும் கமால் குணரட்ண கூட வியத்மக அமைப்பின் முக்கியமான ஒரு உறுப்பினர். கோத்தாவின் வெற்றிக்காக உழைத்தமைக்காகத்தான் அந்தப் பதவி அவருக்கு வழங்கப்பட்டது. இந்த இரண்டு அமைப்புக்களும் கூட பௌத்த - சிங்கள பேரினவாதத்தை முன்னெடுப்பதை இலக்காகக் கொண்டவையாகவே இருந்தன. முஸ்லிம்களின் மேலாதிக்கத்துக்கு எதிரான நிலைப்பாடும் அதில் உள்ளடக்கம். குறிப்பாக முஸ்லிம்களின் சனத்தொகை வேகமாக அதிகரிப்பது சிங்கள மக்களுக்கு பெரும் அச்சுறுத்தல் என்ற கருத்து அவர்களால் முன்வைக்கப்பட்டிருந்தது. அதற்கான பரப்புரைகள் மறைமுகமாக முன்னெடுக்கப்பட்டன.

ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கு முஸ்லிம்களுக்கு எதிரான ஒரு நிலைப்பாட்டை முன்னெடுக்க வேண்டும் என்பது கோத்தாபய தரப்பினர் வகுத்துக்கொண்ட வியூகங்களில் முக்கியமானது. அதனால்தான், ஏப்ரல் 21 தாக்குதல் நடைபெற்ற உடனடியாகவே இதனை எதிர்கொள்ளக் கூடியவர் கோத்தா மட்டும் தான் என்ற கருத்து சிங்களவர்களுக்கு ஏற்பட்டது. கோத்தாவும் அதற்கு ஏற்ற வகையிலேயே கதைகளைச் சொல்லிக்கொண்டிருந்தார். ஐ.எஸ் அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கான தன்னுடைய உபாயங்களை அவர் வெளிப்படுத்திய போது அவருக்கான சிங்களவர்களின் ஆதரவு அதிகரித்தது.

செல்லப்போகும் பாதை

சிங்கள மக்களின் வாக்குளால்தான் தன்னால் ஜனாதிபதியாக வரமுடிந்தது என்பதை

தனது பதவியேற்பின் போது பகிரங்கமாக அறிவித்த கோத்தாபய, ஆனால், அனைத்து இன மக்களின் ஜனாதிபதியாக தான் செயற்படப் போவதாக அறிவித்தார். அது வெறும் போலியான அறிவிப்பு என்பதை தன்னுடைய வாயினாலேயே அவர் அறிவித்தார். "சமஷ்டியையோ அதிகாரப் பரவலாக்கலையே தரமுடியாது" என்பதை உறுதியாகக் கூறிய அவர், பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் அதனை விரும்பவில்லை. சிங்கள மக்கள் விரும்பாத எதனையும் தன்னால் செய்ய முடியாது எனத் தெரிவித்தார். அதனால், 13 ஆவது திருத்தத்தைக் கூட தன்னால் முழுமையாக நடைமுறைப்படுத்த முடியாது என்றார் அவர்.

ஆக, கோத்தாபயவின் காலத்தில் அரசியல் தீர்வு என்று யாரும் பேசிக்கொண்டிருக்க முடியாது என்பது தான்

தொடர்ச்சி 13ம் பக்கம்

இந்தியக் குடியுரிமைப் பிரச்சனை

மதப்பிரச்சனை மட்டுமல்ல

வேல் தர்மா

நரேந்திர மோடி அரசின் இந்திய குடியுரிமைச் சட்டம் நான்கு முனைகளில் எதிர்க்கப்படுகின்றது.

1. இந்தியாவில் வாழும் இஸ்லாமியர்கள்,

2. அசாமியர்கள்,

3. வங்காளிகள்,

4. மதசார்பற்ற நிலையைப் பேண விரும்புபவர்கள்.

இந்திய வாக்காளர்களின் மொத்த தொகையில் இஸ்லாமிய வாக்காளர்களின் விகிதாசாரம், அதிகரிக்காமல் இருப்பதை உறுதி செய்ய மோடி அரசு முயல்கின்றதா என்ற ஐயத்தையும் இந்தியக் குடியுரிமைச் சட்டம் ஏற்படுத்துகின்றது. முத்தலாக் சட்டம், கஷ்மீர் மக்களின் உரிமை பறிப்பு, பாபர் மசூதி இடிப்பு போன்றவற்றிற்கு வன்முறை மூலம் எதிர்ப்புத் தெரிவிக்காத, இந்தியாவில் வாழும் இஸ்லாமியர்கள் மோடி அரசின் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்க்கின்றார்கள்.

மனித நேயத்துடன் கொண்டு வரப்பட்ட சட்டமல்ல

ஆப்கான், வங்காளதேசம், பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து வந்த இந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், பார்சியர்கள், சைனியர்கள், கிருத்தவர்கள் ஆகியோருக்கு இந்தியாவில் குடியுரிமை வழங்கக் கூடிய வகையில் இந்தியாவின் குடியுரிமைச் சட்டத்தை இந்திய அரசு மாற்றியது. இந்தியாவைச் சுற்றியுள்ள பல நாடுகளில் மத அடிப்படையில் மக்கள் ஒடுக்கப்படுகின்றார்கள். சீனாவின் உய்குர் மாகாணத்தில் இஸ்லாமியர்கள் கொடுமையாக நடத்தப்படுகின்றார்கள். மியான்மாரில் இஸ்லாமியர்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். இந்தியாவில் தஞ்சம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்களைப் பற்றி மோடி அரசு கவலை கொள்ளவில்லை.

நிலத்துக்காக போராடும் அசாமியர்கள்.

அசாமியர்கள் தமக்கு என ஒரு சிறந்த கலாச்சாரத்தையும் தனித்துவத்தையும் கொண்ட ஓர் இனம். அவர்கள் தங்கள் மண்ணில் அந்நியர்கள் வந்து குடியேறுவதற்கு எதிராக நீண்ட காலமாகப் போராடுகின்றார்கள். நீர் வளமும் கனிம வளமும் நிறைந்த அவர்களது மண்ணில் பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் அவர்களது தேயிலைத் தோட்ட த்தில் கூலி வேலை செய்வதற்காக கிழக்கு வங்காளிகளை பிரித்தானியர்கள் அசாமின் பெருந் தோட்டங்களில் பணிக்கு அமர்த்தினர். அசாமியர் களின் எதிர்ப்பால் வெளியில் இருந்து வருபவர்கள் அசாமில் நிலம் வாங்கி நிரந்தரமாகத் தங்க முடியாது என்ற சட்டத்தை பிரித்தானியர்கள் உருவாக்கி இருந்தார்கள்.

இரண்டாவதாக, அந்நியர்கள் வந்து அசாமில் குடியேறும் நிலை பாகிஸ்தானும் இந்தியாவும் 1947ஆம் ஆண்டு பிரிந்த போது ஏற்பட்டது. கிழக்கு வங்காளத்தில் இருந்து இந்து வங்காளிகள் அசாமில் தஞ்சமடைந்தனர். அதை அடுத்து அசாமியர்கள் எதிர் கொண்ட குடிவரவுப் பிரச்சனை, 1971இல் வங்களாதேசம் பாகிஸ்தானில் இருந்து பிரியும் போராட்டம் நடந்த போது உருவானது. அப்போது வங்களாதேசம் என அழைக்கப்படும் கிழக்கு வங்காளத்தில் இருந்து இந்து வங்காளிகளும் இஸ்லாமிய வங்காளிகளும் அசாமில் தஞ்சமடைந்தனர். அதைத் தொடர்ந்து தமது மண்ணில் உள்ள சட்ட விரோதமாகக் குடியேறியவர்களுக்கு எதிராக அசாமியர்கள் வன்முறை மிக்க போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்தப் போராட்டம் 1985இல் ராஜீவ் காந்தி அரசுக்கும் அசாமியத் தலைவர்களுக்கும் இடையில் செய்யப்பட்ட அசாம் உடன்பாட்டின் மூலம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அந்த உடன்படிக்கையின்படி வங்களாதேசம் உருவான திகதியான 1971 மார்ச் 24-ம் திகதியின் பின்னர் அசாமில் குடியேறியவர்கள் சட்டவிரோத வெளிநாட்டவர்களாகக் கருதப்பட்டனர். குடிவரவாளர் எந்த மதம் என அசாமியர்கள் பார்க்கவில்லை. வங்களாதேசத்தில் இருந்து வந்த இந்துக்களையும் இஸ்லாமியர்க ளையும் சட்டவிரோதக் குடியேற்றக்காரர்களாகவே அவர்கள் பார்க்கின்றார்கள்.

சீனா இந்தியா மீது படையெடுத்த போது இந்திய அதிகாரிகள் சீனர்கள் கைப்பற்றாமல் இருக்க பல அசாமிய அரச ஆவணங்களை அழித்தனர். அதனால் அசாமியர்கள் தங்கள் மாநிலத்துக்கு என ஒரு குடிமக்கள் பதிவேட்டையும் உருவாக்கினர். 2019 டிசம்பரில் மோடி அரசு கொண்டு வந்த குடியுரிமைச் சட்டம், அசாமியர்கள் ராஜீவ் காந்தியுடன் செய்த உடன்பாட்டிற்கு முரணாக உள்ளது. மோடி அரசின் சட்டத்தின்படி 1971இன் பின்னர் வந்தவர்கள் இந்தியக் குடிமக்களாகக் கருதப்படலாம். அதனால் மோடியின் குடியுரிமைச் சட்டத்தை அசாமியர்கள் எதிர்க்கின்றார்கள்.

இனத்துக்காக போராடும் வங்காளிகள்

வங்காளிகள் இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்திலும் வங்காள தேசத்திலும் நீண்ட காலமாக வாழ்ந்து வரும் ஓர் இனமாகும். அரபு நாட்டு வர்த்தகர்களுடன் ஏற்பட்ட தொடர்பால் பலர் ஆறாம் நூற்றாண்டில் இஸ்லாமிய மதத்தை தழுவிக் கொண்டனர். அப்படி மாறியவர்கள் பலர் கிழக்கு வங்காளத்தில் உள்ளவர்களே. இந்திய பாகிஸ்தான் பிரிவின் போது இஸ்லாமியர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட கிழக்கு வங்கம் பாகிஸ்தானுடன் இணை க்கப்பட்டது.

இந்தியாவின் மாநிலமான மேற்கு வங்காளத்தில் வாழும் வங்காளிகள் தம் இனத்தவர்கள் பாகிஸ்தானில் இருந்தோ வங்களா தேசத்தில் இருந்தோ வருவதை எதிர்க்கவில்லை. அவர்களது இன உணர்வு மத உணர்வைக் கருத்தில் கொள்வதில்லை.

1947 இல் நடந்த பாகிஸ்தான் பிரிவினையின் போதும் 1971இல் நடந்த வங்களாதேசப் பிரிவினையின் போதும் மேற்கு வங்கத்திற்கு வந்த வங்காளிகளை அவர்கள் எதிர்க்கவில்லை. பின்னர் வேலை வாய்ப்புத் தேடி வருபவர்களையும் அவர்கள் எதிர்க்கவில்லை. வரும் வங்காளிகளை வரவேற்கும் மேற்குவங்க முதலமைச்சர் மம்தா பனர்ஜிக்கு அந்தக் குடிவரவாளர்கள் வாக்களிப்பதால், பாரதிய ஜனதாக் கட்சி அதை கடுமையாக எதிர்க்கின்றது. மோடியின் புதிய குடியுரிமைச்சட்டம் தமது இனத்தவர்களான இஸ்லாமிய வங்காளிகளுக்கு பாதகமானது என்பதால் அதை அவர்கள் எதிர்க் கின்றார்கள்.

வங்களாதேசத்தில் பதினாங்கு மில்லியன் இந்துக்கள் வசிக்கி ன்றார்கள். பாகிஸ் தானில் எட்டு மில்லி யன் இந்துக்கள் வசிக்கின்றார்கள். இவர்கள் இந்தியாவிற்கு வந்தால் பெரும் சிக்கல்களை எப்படிச் சமாளிப்பது என குடியுரிமைச் சட்டத்தை எதிர்ப்பவர்கள் கேட்கின்றார்கள். இதுவரை பாரதிய ஜனதாக் கட்சியுடன் இணைந்து பணியாற்றி, பிரிந்த மதவாதக் கட்சியான சிவசேனாக் கட்சியின் தலைவர் உதவ் தக்கரே அரசியலுடன் மதத்தைக் கலப்பது தவறென்கின்றார். உத்தரக்காண்ட் மாநில சட்ட சபைத் தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி தோல்வியடைந்துள்ளது. இந்தியாவின் பொருளாதாரம் ஒன்றரை விழுக்காடு மட்டுமே வளர்கின்றது என்கின்றார் பாஜக மாநிலங்களவை உறுப்பினர் சுப்பிரமணிய சுவாமி. இந்திய மக்களின் வேலைப் பசியைத் தீர்ப்பதற்கு இந்தியப் பொருளாதாரம் குறைந்தது எட்டு விழுக்காடாவது வளர வேண்டும்.

மோடி அரசு கொண்டு வந்த குடியுரிமைச் சட்டம் வெறும் மதப் பிரச்சனை மட்டுமல்ல என்பதை அறிய முடிகின்றது .

தமிழினத்தின் மீதான முகநூலின் அடக்குமுறை

என்ன செய்யப் போகின்றோம்?

வேல்ஸ்சில் இருந்து அருஷ்



முகநூல் என்ற சமூகவலைத்தளம் இன்று மக்களின் அன்றாட தேவைகளில் ஒன்று என்ற நிலைக்கு மாறியுள்ளது. மக்களிற்கு இடையிலான தொடர்பாடல் என்ற நோக்கத்துடன் ஆரம்பமாகிய இந்த வியாபாரப் பொருள் அதன் முதலாளிகளுக்கு அதிக பொருளாதார இலாபத்தை கொடுத்து வரும் அதே சமயம், பல நாடுகளின் அரசியல் விவகாரங்களிலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றது.

சில நாடுகளில் தேர்தல் முடிவுகளை மாற்றியமைக்கும் அளவுக்கு செல்வாக்கு செலுத்தும் இந்த ஊடகம், தற்போது சில இனங்களின் இன விழுமியங்கள், இறைமை மற்றும் குறிப்பிட்ட இன மக்களின் அடிப்படைச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் போன்றவற்றிலும் அதிக தலையீடுகளை மேற்கொண்டு வரு கின்றது.

இந்த சமூக வலைத்தளம், தற்போது குறிப்பிட்ட இன மக்களின் விருப்பு வெறுப்புகளை தீர்மானிக்கும் சக்தியாக மாறி வருகின்றதும், தம்மை அறியாமலேயே மக்கள் இந்த வலைக்குள் வீழ்ந்து, அவர்களின் இன அடக்குமுறைக்குள் சிக்கி, தமக்கு தெரியாமலேயே அவர்களின் கொள்கையை பின்பற்ற வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதும் மிகவும் வேதனையானது.



அதாவது கடந்த மாதம் 26 ஆம் நாள் உலகம் எங்கும் பரந்துவாழும் தமிழ் மக்கள் தமது இனத்தின் விடுதலைக்காக போராடிய விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் பிறந்த தினத்தினை கொண்டாடியிருந்தனர்.

இந்த நிகழ்வின் ஒரு அங்கமாக தமது முகநூலில் தலைவரின் படங்களை பதிவிட்டிருந்தனர். ஆனால் அதனை தன்னிச்சையாக நீக்கிய முகநூல் சமூகவலைத்தளம், பலரின் கணக் கையும் சில மாதங்களுக்கு முடக்கியுள்ளது.

அதாவது யாரை நீங்கள் தலைவராக ஏற்றுக்கொள்ள வேண்டும், எந்த கொள்கையை நீங்கள் பதிவிட வேண்டும், எந்த கொள்கையை நீங்கள் பின்பற்ற வேண்டும், எந்த கருத்தை நீங்கள் எழுத வேண்டும், எந்த கருத்தை நீங்கள் பகிர வேண்டும் என்பதை எதிர்காலத்தில் முகநூல் என்ற வியாபார சமூகவலைத்தளமே தீர்மானிக்கும். அதாவது எதிர்வரும் காலங்களில் உங்கள் கொள்கைகளையும் கருத்துக்களையும் அவர்கள் தீர்மானிப்பார்கள்.

அவர்களின் கொள்கைகளுக்கு இணங்கி அவர்களின் சித்தாந்தங்களை ஏற்று, உங்களின் இன அடையாளங்களைத் தொலைத்து, உங்களின் இன பற்றை துறந்தால் நீங்கள் இந்த வியாபார சமூக வலைத்தளத்தில் தொடர்ந்து இருக்கலாம். இதுவும் ஒரு வகையான இன அடக்குமுறையே அதனை நாம் புரிந்துகொள்ள முடியாத வகையில் அவர்கள் வகுத்துள்ள சட்டங்கள் எம்மை கட்டிப் போட்டுள்ளது.

எனவே தான் ஏறத்தாள 2.23 பில்லியன் மக்களை தனது அங்கத்தவர்களாகக் கொண்ட முகநூலின் பாதச்சுவடுகளே சீனாவில் இல்லை. ஆம் மேற்குலகம் சார்ந்த இந்த வியாபார வலைத்தளத்தின் அரசியல் மற்றும் பொருளாதார உள்நோக்கங்களைப் புரிந்து கொண்டுள்ள சீனா அதனை முற்றாகத் தடை செய்துள்ளது. 2009 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தடை தற்போதும் உள்ளது.

சீனாவின் மேற்கு மாகாணத்தில் இடம்பெறும் கலவரங்களைத் தூண்டிவிடுவதில் முகநூல் அதிக நாட்டம் காண்பித்ததததால் முகநூலுக்கான தடை சீனாவில் கொண்டுவரப் பட்டது. சீனாவின் 'Great Firewall' என்ற சமூகவ லைத்தளக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் அமெரிக்காவின் நிறுவனங்களுக்கு மிகப் பெரும் சவலாக மாறியுள்ளது. ஆனால் சீனா தனது சொந்த சமூக வலைத்தளங்களை அங்கு கொண் டுள்ளது.

எனினும் சீனா என்ற பெரும் சந்தைவாய்ப்பை கைவிட விரும்பாத முகநூல் நிறுவனம் வேறு பெயர்களில் தன்னை பதிவுசெய்து அங்கு ஊடுருவ பல தடவைகள் முயன்றுள்ளது. இவ்வாறு பதிவு செய்யப்பட்ட பல பெயர்களை மோப்பம் பிடித்துவரும் சீனா, அவற்றை தடை செய்து வருகின்றபோதும், கடந்த 2018 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சீனாவில் மேற்கொண்ட இவ்வாறான முயற்சிகளால் முகநூலின் வருமானம் 5 பில்லியன் டொலர்களை எட்டியிருந்தது பலரையும் ஆச்சரியமடைய வைத்துள்ளது.

எனவே தான் முகநூலின் நிறுவுனராக மார்க் செகெர்பேர்க் சீனாவுக்கான பயணங்களை தொடர்ச்சியாக மேற்கொண்டு பேச்சுக்களை நடத்தி வருகின்றார்.

முகநூலுக்கான தடை சீனாவில் மட்டும் கொண்டுவரப்படவில்லை, தாய்வானிலும் உண்டு. மேலும் பங்களாதேசம், ஈரான் மற்றும் வடகொரியா போன்ற நாடுகளிலும் அதன் சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனிடையே, ரஸ்யாவினதும், அங்கு வாழும் மக்களினதும் தனிப்பட்ட தரவுகளை முகநூல் மற்றும் ருவிட்டர் சமூகவலைத்தளங்கள் சேமித்து வைத்திருப்பதற்கு தமது அனுமதிகளைப் பெறவில்லை என்ற குற்றச்சாட்டுக்களை ரஸ்யா இந்த வருடத்தின் ஆரம்பத்தில் முன்வைத் திருந்தது.

ஆனால் தற்போது ரஸ்யாவில் தயாரிக்கப்படும் கணணி மென்பொருட்களை உள்வாங்கி செயற்பட மறுக்கும் தொழில்நுட்ப சாதனங்களை முற்றாக தடைசெய்வதற்கு ரஸ்யா திட்டமிட்டுள்ளது. இந்த தடைச் சட்டமானது 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைமுறைக்கு வரவுள்ளது.

ரஸ்யாவின் தொழில் நுட்பத்தை ஊக்குவிக்கும் முயற்சி இது என ரஸ்யா தெரிவித்தாலும், மேற்குலகத்தின் உளவு பார்க்கும் முயற்சியை முறியடிக்கும் நடவடிக்கையாகவே அவதானிகள் இதனைப் பார்க்கின்றனர்.

தற்போது தமிழ் இனத்தின் எழுச்சிகளை மறைமுகமாக முடக்க முற்பட்டுநிற்கும் முகநூல் சமூகவலைத்தளம் 2015 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் சிறீலங்காவில் இடம்பெற்ற தேர்தல்களிலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி யிருந்தது. 2015 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தல் ஒரு சைபர் தேர்தல் என கொழும்பைத் தளமாகக் கொண்ட தொழில்நுட்ப தகவல் திணைக்களம் தெரிவித்திருந்தது.

> **“முகநுலின் நடவக்கையானது சிறிலங்கா அரசு மீது தமிழ் மக்கள் ஒரு அழுத்தத்தை ஏற்படுத்துவதை தடுக்கும் நடவடிக்கையாகும், அதாவது மேற்குலகமோ அல்லது இந்தியாவோ சிறீலங்காஅரசு மீது ஒரு அழுத்தத்தை ஏற்படுத்தலாமே தவிர, தமிழ் அல்ல”**
>
> *–அரசியல் ஆய்வாளர் இதயச்சந்திரன்–*

2019 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலிலும் “முஸ்லீம் கடையர்களால் அழிக்கப்பட்ட புத்தர் சிலை” என்ற செய்தி உடைந்த புத்தர் சிலை யின் படத்துடன் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டு முகநூலில் பகிரப்பட்டதால் பெருமளாக கடும்போக்கு சிங்களவர்களின் வாக்குக்கள் கோத்தபாயா ராஜபக்சாவின் பக்கம் திரும்பியிருந்தது.

2014 ஆம் ஆண்டு 25 இலட்சம் முகநூல் கணக்குகளையும், 50,000 ருவிட்டர் கணக்குகளையும் கொண்டிருந்த சிறீலங்கா தற்போது 60 இலட்சம் முகநூல் கணக்குகளை கொண்டிருக்குமளவுக்கு உயர்ந்துள்ளது. இந்த தொகையானது சிறீலங்காவில் உள்ள மொத்த சனத்தொகையின் ஏறத் தாள 28

தொடர்ச்சி 13ம் பக்கம்

போர்க்குற்ற விசாரணைகளில் அதிக கவனம் செலுத்த ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம்

கடந்த ஆண்டை விட அதிகளவிலான நிதி ஒதுக்கீட்டை ஐக்கிய நாடுகள் சபை 2020 ஆம் ஆண்டுக்கு மேற்கொண்டுள்ளதுடன், எதிர்வரும் வருடங்களில் போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வெள்ளிக்கிழமை (28) இடம்பெற்ற பொதுச்சபையின் கூட்டத்தில் 2020 ஆம் ஆண்டுக்கான நிதியாக ஏறத்தாள 3 பில்லியன் டொலர்களை ஐக்கிய நாடுகள் சபை ஒதுக்கியுள்ளது. இது கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட 2.9 பில்லியன் டொலர்களை விட சற்று அதிகமாகும்.

இந்த நிதியில் முதல் தடவையாக மியான்மார் மற்றும் சிரியா ஆகிய நாடுகளில் போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கான நிதியும் உள்ளடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் யேமன் கெயிட்டி பகுதிகளில் இடம்பெற்றுவரும் அரசியல் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவதற்கான நடவடிக்கைக் குழுக்களையும் அமைப்பதற்கு ஐ.நா தீர்மானித்துள்ளது.

சிரியாவில் 2011 ஆம் ஆண்டில் இருந்து இடம்பெற்றுவரும் போரில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் தொடர்பிலும், 2017 ஆம் ஆண்டு மியன்மாரில் முஸ்லீம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொள்ளவதற்கு ஏதுவாக ஐ.நா இந்த நிதி ஒதுக்கீட்டை மேற்கொண்டுள்ளது.

ஐ.நாவின் இந்த திட்டத்தில் ரஸ்யா பல பரிந்துரைகளை கொண்டுவந்ததுடன், ரஸ்யா, மியான்மார், சிரியா ஆகிய நாடுகளும், அவர்களின் கூட்டணி நாடுகளான வடகொரியா, ஈரான், நிக்கரகுவா மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகளும் ஐ.நாவின் இந்த நீதி ஒதுக்கீடு தொடர்பில் தமது எதிர்ப்புக்களைத் தெரிவித்திருந்தன.

ஐ.நா பாதுகாப்புச் சபையின் அனுமதி இன்றி இந்த நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிரியா குற்றம் சுமத்தியுள்ளது.

தமிழினத்தின்.... தொடர்ச்சி......

விகிதமாகும்.

சிறீலங்கா உள்ளிட்ட பல நாடுகளின் அரசியலில் மாற்றங்களை ஏற்படுத்தும் காரணிகளில் ஒன்றாக மாற்றம் பெற்றுள்ள இந்த சமூக வலைத்தளம் தற்போது தமிழினத்தின் மீது தன் பார்வையை திருப்பியுள்ளது. முகநூலின் இந்த நடவக்கையானது சிறிலங்கா அரசு மீது தமிழ் மக்கள் ஒரு அழுத்தத்தை ஏற்படுத்துவதை தடுக்கும் நடவடிக்கையாகும், அதாவது மேற்குலகமோ அல் லது இந்தியாவோ சிறீலங்கா அரசு மீது ஒரு அழுத்த த்தை ஏற்படுத்தலாமே தவிர, தமிழ் அல்ல என்பதை உணர்த்துவதாக அரசியல் ஆய்வாளர் இதயச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அதாவது பேரம் பேசும் சக்தியை தமிழ் மக்கள் அடைவதை இந்த சக்திகள் விரும்பவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதாவது கடந்த ஜனவரி மாதம் தனது ஆசிய-பசுபிக் பிராந்திய கட்டமைப்பில் மாற்றம் ஒன்றை கொண்டுவந்த முகநூல் நிறுவனம் ஆறுபேர் அடங்கிய இந்தியக் குழு ஒன்றையும் அமைத்திருந்தது. இந்த ஆறு நபர்களில் சிலர் இந்தியாவின் முன்னாள் அரசியல்வாதிகள் என்பதுடன், தமிழ் இனத்திற்கு எதிராக சிறீலங்கா அரசுடன் இணைந்து செயற்பட்டவர்கள் என்பதும் இங்கு கவனிக் கத்தக்கது.

எனவே முகநூலின் தற்போதைய நடவடிக்கை என்பது எம் இனத்தின் மீது திணிக்கப்படும் புதிய ஒரு அடக்குமுறையாகவே நாம் அணுக வேண்டும். அதனை எவ்வாறு முறியடி ப்பது என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். அதற்கு சிறந்த மாற்றுவழியாக எமக்கான தேசிய ஊடகம் ஒன்று வலுவாக கட்டியமைக்கப்பட வேண்டும். அதன் மூலம் நாம் ஒரு ஊடகச்சமரை ஆரம்பித்து, உலகம் எங்கும் சிதறிக்கிடக்கும் தமிழினத்தை ஒருங்கிணைத்து போராட வேண்டும்.

அது மட்டுமல்லாது இந்த அடக்குமுறைக்கு எதிராக எமது எதிர்ப்பை நாம் தெரிவிக்க வேண்டும். உதாரணமாக உலகில் தமிழர் வாழும் நாடுகளில் உள்ள முகநூலின் காரியாலங்களுக்கு முன்பு அல்லது அந்த நாடுகளின் நகரங்களில் ஒன்றுதிரண்டு நாம் ஜனநாயக வழியிலான எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும், உலகம் எங்கும் உள்ள தமிழ் அமைப்புக்கள் எல்லாம் தமது கண்டனங்களைத் தெரிவித்து மின்னஞ்சல்களை முகநூலுக்கு அனுப்ப வேண்டும். இவ்வாறான போராட்டங்கள் தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும்.

இல்லையெனில் இந்த வியாபார உலகில் தமது சுயநல நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டு வலம் வரும் சமூகவலைத்தளங்களின் கொள்கைகளுக்குள் கட்டுண்டவர்களாக நாம் எமது இனத்தின் அடையாளங்களைத் தொலைத்து பரிதவிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்.

திட்டமிட்டு... தொடர்ச்சி...

குறிப்பாக இன்னும் ஐந்து வருடங்களில் ஏறாவூர்ப்பற்று, கிரான் போன்ற பிரதேசங்களில் வெள்ள காலங்களில் மக்கள் வசிக்க முடியாத நிலையேற்படுவதுடன், அப்பகுதிகளில் எந்த காலத்திலும் மக்கள் வசிக்க முடியாத சூழ்நிலை யேற்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிங்கள மக்கள் வசிக்கும் பகுதிகளிலோ முஸ்லிம் மக்கள் வசிக்கும் பகுதிகளிலோ இவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாத நிலையில், தமிழ் மக்கள் வசிக்கும் பகுதியை மட்டும் இலக்கு வைத்து இவ்வாறான சட்டவிரோத மண் அகழ்வு நடவடிக்கைகளை சட்டரீதியான முறையில் அரசாங்கம் மேற்கொண்டு வருவது குறித்து அனைத்து தரப்பினரும் கவனம் செலுத்த வேண்டிய நிலையில் இருக்கின்றோம். உரிமையினையும் எமக்கான சுதந்திரத்தினையும் கோரி நிற்கும் நாம், எமது வளங்களை பாதுகாப்பதற்கு தவறிவருகின்றோம் என்ற உண்மை இன்று உணரப்பட்டுள்ள நிலையில், அதற்கான செயல் வடிவம் கொடுக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

2020... தொடர்ச்சி...

யதார்த்தம். அவரைப் பொறுத்தவரையில் அபிவிருத்தி மட்டும் தான் இனப்பிரச்சினைக்கான தீர்வு. ஆனால், அந்த அபிவிருத்தியைச் செய்வதற்கான அதிகாரம் மத்தியிலேயே இருக்க வேண்டும் என்பது அவரது நிலைப்பாடு.

மறுபுறத்தில் ஜெனீவா தீர்மானங்களைத் தன்னால் ஏற்கமுடியாது என்பதையும் அவர் கூறிவிட்டார். அதாவது, போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறப்போவதில்லை என்பது அவரது உறுதியான நிலைப்பாடு. போர்க் குற்றவாளிகள் என அடையாளம் காணப்பட்டவர்களை அமைச்சுக்களின் செயலாளர்களாகவும், திணைக் களத் தலைவர்களாகவும் நியமிக்கும் அவர், ஜெனீவா தீர்மானங்களை ஏற்றுக்கொள்வார் என்பது எதிர்பார்க்கக்கூடியதல்ல. ஆக, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, காணிப்பிரச்சினை, இராணுவ ஆக்கிரமிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை போன்ற எதற்கும் தீர்வு கிடைக்கப்போவதில்லை.

இந்த நிலையில்தான் 2020க்குள் நாம் பிரவேசிக்கிறோம். 2020 இல் தமிழ் மக்கள் எதிர்கொள்ளப்போகும் சவால்கள் என்ன? அவர்களுக்கான வாய்ப்புக்கள் என்ன? அவை குறித்து அடுத்த வாரம் பார்ப்போம்.

கடும்போக்கு ... தொடர்ச்சி...

நல்கியிருக்கின்றார்கள். அதுகூட போதாது என்றே கூறுகின்றார்கள். லண்டனுக்குச் சென்ற போதும், பின்லாந்திற்குச் சென்ற போதும் பத்திரிகையாளர்களிடம் கூறியிருக்கின்றேன். நாங்கள் இங்கு போராட்டம் நடத்தும் போது அதை சர்வதேச நாடுகளுக்கு தெரிவிக்கும் முகமாக புலம்பெயர் தமிழர்கள் தமிழர்களின் ஆதரவு எந்தளவிற்கு இருக்கின்றது என்பதை அந்தந்த நாடுகளுக்குக் காட்டுவதற்கும் அங்கு போராட்டங்களை ஒழுங்குபடுத்துகின்றார்கள். உதாரணமாக சிறுவர் தினத்தன்று லண்டனில் நடந்த போராட்டம் வரவேற்கத்தக்கது. அவர்கள் தங்கள் வேலை, போராட்ட இடத்தின் தூரம் போன்ற காரணங்களினால் போகாமல் விடுகின்றார்கள். அவர்களுக்கும் பங்கு உள்ளது. எனவே அவர்கள் அர்ப்பணிப்புடன் இந்தப் போராட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் அந்தந்த நாட்டு அரசாங்கங்களுக்கு ஒரு தெளிவை ஏற்படுத்த வேண்டும். நாங்கள் எதிர்பார்ப்பது அவர்கள் எங்களுக்காக போராட வேண்டும். தாங்களாகவே ஒழுங்குபடுத்தி இவற்றை செய்ய வேண்டும். அங்கு அறிவுபூர்வமானவர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அந்தந்த அரசாங்கங்களுடன் கதைத்து ஒரு மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். பல நாடுகளின் அங்கீகாரம் இருந்தால் தான் எமக்கு ஒரு தீர்வு வரும். எனவே அவர்கள் அதற்குரிய பங்கை ஆற்ற வேண்டும் என்பது மிகப் பெரிய ஒரு வேண்டுகோளாக இருக்கின்றது.

தற்றுணிவு தற்கொலைக்கல்ல

சொ. திவ்யா, உதவி விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்

உலகில் உள்ள உயிரினங்களில் மனிதன் மட்டுமே தற்கொலை செய்து கொள்ள முயற்சிக்கின்றான். மற்ற உயிரினங்கள் அனைத்தும் தமக்கு ஏற்படும் இடர்ப்பாடுகளைக் கடந்து போராடி வெற்றிபெற முயல்கின்றன. இதனால் தான் தற்கொலை செய்வது சட்டத்திற்குப் புறம்பான ஒன்றாகக் கருதப்படுகின்றது. தற்கொலையைத் தடுக்கும் தினமாக செப்டெம்பர் 10ஆம் திகதி அனுஸ்டிக்கப்படுகின்ற போதும், உலக மனித இனத்தின் உளநலத்தைப் பேணும் வகையில் 2019ஆம் ஆண்டு உலக உளநல தினமானது அதிகரித்து வரும் தற்கொலைக்கு விழிப்புணர்வூட்டி ஆரோக்கிய உளத்தை வளர்த்தெடுக்கும் முகமாக "தற்கொலையைத் தடுத்தல்" எனும் தொனிப் பொருளில் சர்வதேச ரீதியாக ஒக்டோபர் 10ஆம் திகதி அனுஸ்டிக்கப்படுகின்றது.

வாழ்க்கை வெள்ளத்தின் அழிவுகளில் சிக்கி எல்லாவற்றையும் இழந்து, தங்களையும் இழக்க நேரிடும். சோகங்கள் நிகழாத தேசங்கள் இல்லை. இன்று தற்கொலை என்பது சர்வதேச பிரச்சினையாகவே உள்ளது.

சிறுவர் முதல் சினிமா நட்சத்திரங்கள் வரை, மாணவர்கள் முதல் விவசாயிகள் வரை தற்கொலையில் ஈடுபடாத சமூகப் பிரிவுகளே கிடையாது. ஓர் மனிதன் ஏதோ ஒரு உந்துதலில் சுய விருப்புடன் அல்லது சுய தீர்மானத்துடன் தன் உயிரைத் தனக்கு உகந்த ஓர் வழியில் போக்கிக் கொள்வதே தற்கொலை.

தற்கொலைக்கான அடிப்படை உண்மை எந்தவொரு மனிதன் ஒரு நாளுக்கு போதுமான தூக்கம், ஓய்வு எடுத்துக் கொள்ளவில்லையோ அந்த மனிதன் நாட்பட்ட நாளுக்கு அப்பால் அவனின் ஆழ்மனதில் எழும் எண்ணமே நிரந்தரமான தூக்கம் தேவை என்பதாகும். அதற்காக தேர்ந்தெடுக்கும் வழியே தற்கொலை. உதாரணமாக அதிகளவானோர் பரீட்சைக்காக நித்திரையின்றி, ஓய்வின்றி பல கனவுகளுடன் கற்று, பரீட்சையில் எதிர்பார்த்த புள்ளி பெறவில்லை எனின் இவ்வளவு காலம் எடுக்காத தூக்கம், ஓய்வு என்பவற்றை நிரந்தரமாக எடுக்க எண்ணி தற்கொலை செய்ய முயற்சிக்கின்றனர்.

உலக சுகாதார நிறுவனத்தின் கருத்துப்படி உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு ஆண்டுக்கும் சுமார் 800,000 பேர் தற்கொலையால் இறக்கின்றனர். ஒவ்வொரு 40 வினாடிகளுக்கும் ஒரு மனிதன் தற்கொலையால் இறக்கின்றான். இந்த எண்ணிக்கையைக் காட்டிலும் 25%வீதத்திற்கும் அதிகமானோர் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர். இவ்வாறு நிகழும் தற்கொலையால் சராசரியாக 135 பேர் மனதளவில் பாதிக்கப்படுகின்றனர். ஆண்டிற்கு 108 மில்லியன் மக்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர். கடந்த 48 ஆண்டுகளில் தற்கொலை 60%உயர்ந்துள்ளது. 15-24 வயதுக்குட்பட்டவர்களின் மரணத்துக்கு முக்கிய காரணமாக இருப்பதும் தற்கொலையே. ஏமாற்றம், உறவுகளைப் பிரிதல், இயலாமை, குற்றஉணர்வு, நோய், கடன், அவமானம், காதல், தோல்வி, பரீட்சைத் தோல்வி என பல காரணங்கள் தற்கொலைக்குள் தள்ளுகின்றது.

தற்கொலை எண்ணம் கொண்டுள்ள நபர்களில் வெளிப்படும் அறிகுறிகள்

தற்கொலை எண்ணமுடையவர்கள் உடல், உள, மனவெழுச்சி, நடத்தை ரீதியில் பல அறிகுறிகளை வெளிப்படுத்துவர். இவர்கள் மரணம் பற்றி ஈடுபடல், கதைத்தல், எழுத்தாக்கங்கள், ஓவியங்களில் மரணம் பற்றிகுறிப்பிடல், உடலாலும், உள்ளத்தாலும் பலம் குன்றியிருப்பதாக எண்ணல், தற்கொலை செய்வதற்கான வழிமுறைகள் பற்றிய தகவல்களைச் சேகரித்தல், எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையின்மை, திடீரென தினக்குறிப்பு எழுதல், கடுமையான சோர்வு, நம்பிக்கையில்லாத் தன்மை, திடீரென உணவில் நாட்டமின்மை, குற்ற உணர்வு, குழப்பமான சிந்தனையூடாக நடத்தை மற்றும் உணர்ச்சி மாற்றங்களைக் கொண்டிருப்பர்.

தன்னம்பிக்கை இல்லாதவர்களே தற்கொலை செய்கின்றனர் எனக் கருதுவது தவறானது. வாழ்வில் பெரும் வெற்றி பெற்ற பலரும் இந்த தவறுகளை இழைக்கின்றனர். இங்கு யாரும் இறக்க வேண்டும் என இவ் முடிவுகளை எடுப்பதில்லை. தன்னை அணைத்து, ஆறுதல் கூற யாரும் இல்லாததினாலே அதற்கு தீர்வாய் பலர் இம் முடிவை எடுக்கின்றனர். தற்பொழுது அறிவியல் உலகில் தவறான இலக்கை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறோம். ஆரம்ப காலங்களில் உறவுகள் அனைவரும் ஒன்று கூடியிருந்தனர். பிரச்சினைகள் எதுவாயினும் அவர்களுடன் கலந்து பேசின் ஒரு தீர்வு கிடைக்கும் என இருந்தனர். ஆனால் இன்று பணம், அந்தஸ்து, தனிக்குடும்ப வாழ்வு, இணையத்தள மோகம் என்பவற்றால் ஒரே வீட்டில் இருப்பவர்கள் கூட ஒருவரை ஒருவர் முகம் கொடுத்து பேச முயற்சிப்பதில்லை. தோல்வி, மனக்கசப்பு, குழப்பங்கள் எழும் சந்தர்ப்பங்களில் சரியான அன்பும், அரவணைப்பும் இருந்தாலே தற்கொலையைத் தவிர்க்கலாம். பெற்றோர்கள் ஓயாமல் ஓடிச் செல்வங்களைச் சேகரிப்பதை நிறுத்தி பிள்ளைகளிடம் நேரத்தை ஒதுக்கி பேசவேண்டும். பிள்ளைகளின் கனவை நிறைவேற்ற துணையாய் இருங்கள், வெற்றி, தோல்வி என எந்த சூழலிலும் அன்பும், ஆதரவும் உள்ளது என்பதை அவர்களுக்கு உணர்த்துங்கள். உண்மையில் குடும்பம் என்ற இடத்தில் மட்டும்தான் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை.

இதற்கு சிறந்த உதாரணமாக, ஒரு பால் வியாபாரிக்கு, சுற்றிப் பல இடங்களில் கடன். கடனைத் தீர்ப்பதற்கு வங்கிகளில் பல உதவி கேட்டும் கிடைக்கவில்லை. மனவிரக்தியால் கோயிலுக்கு சென்றார். கோயிலில் பலர் கடவுளின் வரம் பெற வரிசையில் நின்றனர். இவர் வரிசையின் இறுதியில் நின்றமையால் தரிசனம் பெற முடியவில்லை. தரிசனம் கிடைக்காததும் அவருக்கு வாழ்வின் மீதான நம்பிக்கை தொலைந்து போகக் காரணமாகியது. 'இனி நான் வாழக் கூடாது. தற்கொலை செய்யலாம்' என எண்ணி மலை உச்சிக்குச் சென்றார். மலை உச்சியில் அதிகளவானோர் தற்கொலை செய்வதற்கு வரிசையில் நின்றனர். இவரும் அவ்வரிசையில் நின்றார். அங்கே முன் வரிசையில் ஒரு முதியவர் தான் தற்கொலை செய்யாமல், பின்வரிசையில் நிற்போர் தற்கொலை செய்வதற்கு இடம் விட்டுக் கொடுத்துக் கொண்டு இருந்தார். அதைப் பார்த்த வியாபாரிக்கு புரியவில்லை. பின் வியாபாரி குதிக்கும் நேரம் வந்தது. அப்போது வியாபாரி முதியவரைப் பார்த்து 'ஏன் நீங்கள் குதிக்காமல் தற்கொலை செய்ய இடம் விட்டுக் கொடுக்கிறீர்கள்' என்று கேட்டார். அதற்கு முதியவர் 'எனக்கு 60 வயதாகி விட்டது. நான் வாழ்க்கையை ஓரளவு வாழ்ந்து விட்டேன். முதுமையின் கோரம் என்னை பயமுறுத்துகிறது. அதனால் தற்கொலை செய்யலாம் என்று வந்தேன். பள்ளத்தைப் பார்க்க பயம் வந்து விட்டது. வேறு யாராவது குதித்தால் அவர்களின் துணிவைப் பார்த்து குதிக்கலாம் எனக் காத்திருந்தேன். பலர் வந்து குதித்தனர். பார்த்ததும் பயம் தெளிந்து, சிந்தனை பிறந்தது. துணிவாக இறப்பதை விட துணிவாக முதுமையை எதிர் கொள்ளலாம் என இதை ஒவ்வொருவரிடமும் கூறுகிறேன்' என்றார். இதைக் கேட்ட வியாபாரி துணிவோடு தற்கொலை செய்வதை விட துணிவோடு வாழ்வோம் என தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டார். இதில் வியாபாரி எதிர் கொண்ட நீண்ட வரிசைதான் அன்றாடம் நாம் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், நெருக்கீடுகள் ஆகும். இங்கு முதியவராய் ஆலோசணை கூறியவர் எமது நண்பராகவும், உறவினராகவும் எம்முடனே இருப்பர்.

தற்கொலை எண்ணத்திலிருந்து பாதுகாக்க

தற்கொலையின் ஆரம்ப கட்டம் மன அழுத்தம். மன அழுத்தத்திலிருப்பவர்கள் தமது கஷ்டத்தை பகிர்ந்து கொண்டால், உடனே அறிவுரை வழங்காமல் பொறுமையாகக்காது கொடுத்து கேட்க வேண்டும். 'இதெல்லாம் ஒரு பிரச்சினையா, எல்லாம் சரியாகி விடும், இதுவும் கடந்து போகும்' என்ற வார்த்தைகளை மனஅழுத்தத்தில் இருப்பவர்களிடம் பேசுவதைத் தவிர்ப்பது நல்லது. அதற்குப் பதில் அவர்கள் கூறுவதை காது கொடுத்து கேட்டு 'உனக்கு எப்ப கஷ்டம் வரும் போதும் என்னிடம் பேசு. உனக்கு நான் உறுதுணையாக இருப்பேன்' எனப் பேசி நம்பிக்கையூட்ட வேண்டும்.

தற்கொலை எண்ணம் தோன்றும் போது சிந்தனையை மாற்றும் வகையில் மகிழ்ச்சியாக இருந்த தருணங்களை சிந்தித்தல் அல்லது அதை நாட்குறிப்பேட்டில் எழுதுவதால் தற்கொலை என்ற எண்ணம் மறைந்து செல்கின்றது. தற்கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் தோன்றும் போதெல்லாம் தனி ஒருஇடம் தேடி, கண்களை மூடி, அமைதியான இடத்தில் படுத்து சிந்திக்க வேண்டும்.' ஏதோ ஒரு வழியைப் பின்பற்றி, தற்கொலை செய்து, இறந்த உடலை வீட்டில் வைத்திருக்கிறார்கள் எனவும். அப்பொழுது உறவுகளின் அவஸ்தை நிலைகளையும், அத்துடன் தற்கொலை செய்யும் பெண்களுக்கு முதலில் பிறப்பு உறுப்புக்களே பரிசோதனை செய்யப்படும் என்பதையும் சிந்திக்கும் போது இயல்பாகவே அவ் எண்ணம் மறையக்கூடும்.

தற்கொலை எண்ணம் உடையவர்களை

அடையாளம் காணும் போது அன்பும், ஆதரவும், பாதுகாப்பும் வழங்க வேண்டும். அவர்களின் சுய மதிப்பீட்டை ஏற்படுத்தும் வண்ணம் அவர்கள் வெற்றியடைந்த விடயங்கள், பிரச்சினைகளுக்கு சவால் கொடுத்த வழிமுறைகளை எடுத்துரைக்க வேண்டும். குடும்பப் பொறுப்புக்களில் ஈடுபட வைத்தல், சமூக ஆதரவைப் பெற்றுக் கொடுத்தல், ஆன்மீக வழி திசை திருப்புதல், வாழ்வின் அர்த்தம் காணவைத்தல் என்பன அவர்களின் எண்ணங்கள் மறைந்து போகக் காத்திரமாய் அமையும்.

பல தோல்விகளில் எப்பொழுது விழுந்தாலும் திரும்பத் திரும்ப முளைச்சு வந்தவர்களே இன்றைய சாதனையாளர்கள். தற்கொலை கோழைத்தனம். அதில் வீரத்தனமும் உண்டு. அந்த வீரத்தனத்தை வேறு வழியில் திசை திருப்பி, சாதனை படைத்து வாழத் துணியுங்கள். வாழ்வில் பெறும் தோல்விகள் முயற்சிக்கானது மட்டுமே, வாழ்க்கைக்கானது அல்ல எனத் துணிந்து சாதனை படையுங்கள்.